Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 ஆவணி 08 ஞாயிற்றுக்கிழமை (24.08.2014) பக்கங்கள் 20 ஓசை – 327

# அரசியல் தீர்வை எட்டுவதற்கு அனைவரும் ஒன்றிணையவேண்டும்

## கூட்டமைப்பிடம் பிரமதர் மோடி தெரிவிப்பு


(புதுடில்லி)

இலங்கையிலுள்ள அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்து 13ஆவது திருத்தசட்டத்தின் அடிப்படையில் அரசியல் தீர்வைக்காண வேண்டுமென பிரதமர் மோடி தன்னைச்சந்தித்த கூட்டமைப்புக்குழுவினரிடம் தெரிவித்துள்ளதாக இந்தியப் பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றையதினம் புதுடில்லியில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தலைமையிலான குழுவினரை சந்தித்து கலந்துரையாடிய போதே பிரதமர் மோடி இவ்வாறு தெரிவித்துள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

இலங்கையில் நிலவும் தற்போதைய சூழல் பற்றியும் அதிகாரப் பகிர்வு மற்றும் நல்லிணக்க நடவடிக்கைகள் தொடர்பில் தங்களின் மதிப்

19 ஆம் பக்கம் பார்க்க



## அரசியல் தீர்விற்கான விடயங்கள் மோடியுடனான சந்திப்பில் விளக்கம்

### என்கிறார் சம்பந்தன்

(புதுடில்லி)

இலங்கையில் அரசியல் தீர்வைக் காண்பதற்கான விடயங்கள் குறித்து பிரதமர் மோடியுடனான சந்திப்பில் எடுத்துரைத்ததாக இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார். மோடியுடனான சந்திப்பிற்குப்பின்னர் ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையின் வடக்கு மாகாணசபை முதலமைச்சரான சி.வி. விக்னேஸ்வரனை விரைவில் சந்திக்க இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி விருப்பம் தெரிவித்துள்ளார். அரசியல் தீர்வு காண வேண்டிய விவகாரங்கள் குறித்து இந்தியப்

19 ஆம் பக்கம் பார்க்க

## இந்தியப்பிரதமர் மோடியின் ஆக்கபூர்வ ஆலோசனை; வரவேற்கிறது ஈ.பி.டி.பி.

இலங்கை- இந்திய ஒப்பந்தத்தின் ஊடாக ஏற்படுத்தப்பட்ட 13ஆவது திருத்தச் சட்டத்தை வலுப்படுத்தி அதை அடித்தளமாகக் கொண்டு நிரந்தர அரசியல் தீர்வு நோக்கிச் செல்ல வேண்டும்என்று தன்னை நேற்றுச் சந்தித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்திருப்பதை ஈ.பி.டி.பி வரவேற்கின்றது.

இவ்வாறு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நன்றி தெரிவித்து எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார். அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது, இலங்கையில் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வை பெற்றுக் கொள்வதற்கு அரசியல் அமைப்பில் ஏற்றுக் கொள்ளப்பட்ட தீர்வை நோக்கி முன்னகர்வதற்கு இருக்கக்கூடிய ஒரே வழிமுறையாக 13ஆவது திருத்தத்தச்சட்டத்தை அடிப்படையா

19 ஆம் பக்கம் பார்க்க

## கூட்டமைப்பு–அரசுதரப்பு இணைந்து இந்தியாவுடன் பேசியிருக்கலாம்

### அமைச்சர் வாசு தெரிவிப்பு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இந்திய அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கின்றமை தொடர்பில் அதிருப்தியடைந்துள்ளதாக தேசிய மொழிகள் மற்றும் சமூக நல்லிணக்க அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி, இணக்கப்பாடு ஏற்படாத விடயங்களையும் இணக்கப்பாடு ஏற்பட்ட விடயங்களையும் குறித்துக் கொண்டு, இந்தியாவுடன் இலங்கை அரசாங்கமும் தமிழர் தரப்பும் சேர்ந்து பேச்சுவார்த்தை நடத்தியிருக்கலாம் என்று தான் கருதுவதாகவும் அமைச்சர் பி.பி.சி. சிங்கள சேவையிடம் தெரிவித்தார்.

இலங்கை அரசாங்கத்தின் பிரதிநிதியொருவரும் இந்தியாவுடனான பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டிருந்தால் மட்டுமே பேச்சுவார்த்தை முறையாக அமைய முடியும் என்றும் அமைச்சர் கூறினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனியாகவும் இலங்கை அரசாங்கம் தனியாகவும் இந்திய அரசுடன் பேச்சுவார்த்தை நடத்

19 ஆம் பக்கம் பார்க்க

## காணாமற்போனோர் முறைப்பாடு விசாரிக்க குழுவொன்று நியமனம்

### ஆணைக்குழுத் தலைவர் தெரிவிப்பு

காணாமல் போனவர்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக் குழுவுக்கு கிடைத்த முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்கு விசாரணைக் குழுவொன்றை நியமிப்பது குறித்து கவனம் செலுத்தியுள்ளதாக காணாமல் போனோர் தொடர்பான ஜனாதிபதி ஆணைக் குழுவின் தலைவர் மக்ஸ்வல் பரணகம தெரிவித்தார்.

காணாமல் போனோர் தொடர்பான ஆணைக்குழுவுக்குக் கிடைத்துள்ள முறைப்பாடுகளின் அடிப்படையில் ஆணைக் குழுவினூடாக விசாரணைகளை முன்னெடுப்பதா அல்லது தனியான விசாரணைக்குழுவினூடாக முன்னெடுப்பதா என ஆராய்ந்து வருவதாக ஆணைக்

19 ஆம் பக்கம் பார்க்க

## நிறைவேற்று ஜனாதிபதி முறைமை எதிர்த்து நாடு தழுவிய போராட்டம்

### மாதுலுவே சோபித தேரர் அறிவிப்பு

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமைக்கு எதிராக நாடு தழுவிய ரீதியில் போராட்டம் நடத்தப்பட உள்ளதாக மாதுலுவே சோபித தேரர் அறிவித்துள்ளார். எதிர்வரும் 26ஆம் திகதி முதல் நாட்டின் பல பாகங்களுக்கும் சென்று நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையின் பாதக விளைவுகள் குறித்து மக்களுக்கு தெளிவுபடுத்த திட்டமிட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.


என்ன காரணத்திற்காக பொது வேட்பாளர் நிறுத்தப்பட வேண்டும் என்பது குறித்தும் தெளிவுபடுத்தப்பட உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். எதிர்க்கட்சிகள், சிவில அமைப்புக்களுடன் இணைந்து நூடு தழுவிய ரீதியில் தொடர்

19 ஆம் பக்கம் பார்க்க


## ஒவ்வொரு வாரமும் 500டெங்கு நோயாளர்

நாட்டில் ஒவ்வொரு வாரமும் சராசரியாக 500 டெங்கு நோயளர்கள் இனம்காணப்படுகின்றனர். மழைகாலம் தொடங்கியுள்ளதால் இந்த நோயின் தாக்கம் அதிகரிக்கலாம் என எச்சரித்திருக்கிறார் தொற்றுநோய்ப் பிரிவின் தலைவர் டாக்டர் பபா

19 ஆம் பக்கம் பார்க்க



# திக்கம் வடிசாலை உற்பத்திகளின் விற்பனையை விரிவுபடுத்த ஏற்பாடு



திக்கம் வடிசாலை புனரமைக் கப்பட்டு வரும் நிலையில் அதன் உற்பத்திகளை ஏனைய மாகா ணங்களில் சந்தைப்படுத்துவது தொடர்பிலான கலந்துரையாட லொன்று நேற்றையதினம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்றது.

அமைச்சரின் யாழ்.அலு வலகத்தில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் திக்கம் உற் பத்திகளை வடமத்தி, வடமேல், சப்ரகமுவ மற்றும் மேல் மாகாணங்களில் சந்தைப்படுத் துவது தொடர்பிலும் அதன் உற்பத்தித் திறனை மேம்படுத்து வது குறித்தும் கலந்துரையாடப்பட் டதுடன் அதற்கான நடவடிக்கைக ளும் முன்னெடுக் கப்படவுள்ளன.

இக் கலந்து ரையாடலில் பனை அபிவி ருத்திச் சபை யின் தலைவர் பசுபதி சீவரத் தினம், பொது முகாமையாளர் திரு.லோகநா தன், கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திரு.அருந்தவ நாதன் மற்றும் தென்பகுதி விற் பனை முகவர் கள், திக்கம் வடி சாலைசங்கத் தலைவர் உப தலைவர் ஆகி யோர் கலந்து கொண்டனர்.

# குளத்து மீன் உண்பதை தவிர்த்துக் கொள்ளுங்கள்

வவுனியா மாவட்டத்தில் குளங்கள் வற்றிக் காணப்படு வதனால் குளத்து மீன்கள் உண் பதை பொது மக்கள் தவிர்த்துக் கொள்ளுமாறு வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பந்துல கரிச் சந்திர தெரிவித்தார்.

இது தொடர்பாக அரசாங்க அதிபர் வெளியிட்டுள்ள அறிக் கையில், வவுனியா மாவட்டத்தில் தற்போது வறட்சியான சூழல் காணப்பட்டு வருகின்றமையால் குளங்களில் நீர் வற்றிக்காணப்ப டுகின்றது. இந் நிலையில் குளத்து மீன்கள் உண்பதனை தவிர்ப்ப தன் மூலமாக நோய்கள் வருவதை தடுக்க கூடியதாக இருக்கும்.

அத்துடன் குளத்தில் அதிகள வான மீன்கள் இறந்து காணப் படுகின்றன. இந்த நிலையில் இறந்த மீன்களும் விற்பனைக்கு வரக்கூடிய சந்தர்ப்பம் உள்ளமையி னால் மழை பெய்து குளங்களில் நீர் நிரம்பியதன் பின்னர் குளத்து மீன்களை உண்ணுமாறு கோரியுள ளார். (70)





## டயானா பிளாஸ்ரிக்

*றீசைக்கிள் (மீள் சுழற்சி)*

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.06 கனகசபை லேன்,
சிவலிங்கப்புளியடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
021 222 8680,
077 592 5088
(C/3727)


# சிறுத்தீவுக்கு புதிய வீதி

யாழ்.சிறுத் தீவுப் பகுதிக்கு மண்டைதீவு பிரதான வீதியில் இருந்து வீதி ஒன்று நிய மிக்கப்பட்டு வருகின்றது.

சுமார் 650 மீற்றர் நீளம் கொண்ட இவ் வீதியானது. சிறுத் தீவுப் பகுதியில் மேற்கொள் ளப்படவுள்ள உல்லாசப் பயணத்துறை நிர்மா ணப் பணிகளுக்கு என நிர்மாணிக்கப்பட்டு வரு வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வெளிநாட்டு முதலீட்டாளர் ஒருவரின் நிதி மூலமாக இவ்வீதி நிர்மாணிக்கப்பட்டுவருவதுடன் கல்லிடப்பட்டு காப்பெற் வீதியாகவும் இவ்வீதி நிர்மாணிக்கப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்ப டுகின்றது. தற்சமயம் வீதிக்கு சிறுகற்கள் போடப்பட்டு வருகின்றன. (பா)


அனைவருக்கும் பகிரப்பட்ட, விஸ்தரிக்கப்பட்ட, சமனான பரிசமைப்பு

## நியத்த ஜய

உத்தியோகபூர்வ முடிவு

| | |
|---|---|
| வெற்றி வாரம் - | 284 |
| திகதி - | 2014.08.22 |
| வர்ணம் - | நீலம் |

வெற்றி இலக்கங்கள் — ஆங்கில எழுத்து

04 07 38 39 W

பரிசுத் தொகை ரூபா. 11,666,320/- வெல்லப்படவில்லை

| பரிசு வகை | பரிசுத் தொகை ரூ. | வெற்றியாளர்களின் எண்ணிக்கை | மொத்த பரிசுத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுக்கு | 1,000,000/- | 01 | 1,000,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 50,000/- | 09 | 450,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்களுக்கு | 1,000/- | 186 | 186,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 1,000/- | 339 | 339,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்களுக்கு | 60/- | 8504 | 510,240/- |
| ஏதேனும் 1 இலக்கம் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 40/- | 4537 | 181,480/- |
| ஏதேனும் 1 இலக்கத்திற்கு | 20/- | 111856 | 2,237,120/- |
| ஆங்கில எழுத்திற்கு | 20/- | 16115 | 322,300/- |
| நான்கு இலக்கங்கள மற்றும் ஆங்கில எழுத்து பொருந்துவதன் மூலம் | 11,666,320/- | - | - |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | | | 5,226,140/- |

எதிர்வரும் செவ்வாய்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசுத்தொகை ரூபா. 11,885,320/-

2014.08.26ம் திகதி செவ்வாய்க்கிழமை அடுத்த சீட்டிழுப்புக்கு செல்லுப்படியாவது மஞ்சள் வர்ண டிக்கட்களாகும்

வெற்றி பெறும் டிக்கட்கள் 6 மாதத்திற்கு செல்லுப்படியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை,
யூனியன் ப்லேஸ், கொழும்பு - 02.
தொ.பே: 011 2333546/47
web : www.dlb.lk
(C/3760)


# INVITATION FOR BIDS
## University of Jaffna

## Provision of Cleaning and Maintenance Services for the University of Jaffna-2014/2015

1. The Chairperson, Procurement Committee, University of Jaffna will receive sealed Bids for the following contracts up to 2.00 p.m. on 12th September, 2014 from the eligible Firms.

| Contract No | Service |
|---|---|
| UJ/MB/2014/CS/05 | Provision of Cleaning, Janitorial and Maintenance Services for the Main Campus at Thirunelvely, Jaffna – 2014/ 2015 |
| UJ/MB/2014/CS/06 | Provision of Cleaning, Janitorial and Maintenance Services for the Ananthakumarasamy Female Hostel and Balasingam Male Hostel, University of Jaffna-2014/2015 |
| UJ/MB/2014/CS/07 | Provision of Cleaning, Janitorial and Maintenance Services for the Faculty of Medicine University of Jaffna-2014/2015 |
| UJ/MB/2014/CS/08 | Provision of Cleaning, Janitorial and Maintenance Services for the Ramanathan Academy of Fine Arts at University of Jaffna- 2014/2015 |

2. Period of contract should be 365 days subject to a performance evaluation period of 60 days.

3. Firms which satisfy the following conditions are eligible to submit Bids. Documentary evidences should be provided with Bids.

3.1. Must be registered in Sri Lanka under the Company's Acts or Business Name Registration Ordinance.

3.2 . Must have satisfactorily carried out at least one cleaning service contract to a Government Department/ Corporation/ University during the last 3 years wh[illegible] the annual contract sum is not less than **Rs. 1.0 Million for contracts No 3[illegible], Rs. 1.2 Million for contract No 2 and Rs. 2.0 Million for contract No 1.**

3.3. Availability of trained and experienced Sri Lankan staff during the last 3 years should be at least 15 employees for each Bid.

4. Interested bidders may obtain further information from Deputy Registrar, Capital Works & Planning Unit, University of Jaffna, and inspect the bidding documents at the same address on any working day from 9:00hrs to 16:00hrs.
Contact numbers are: Phone. Tel: 021 2219201 Fax: 021 221 9201.

5.A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to Deputy Registrar, Capital Works & Planning Unit, University of Jaffna, **from 25.08.2014 until 11.09.2014** from 9:00 hrs to 15:00 hrs upon payment of a **non refundable fee of Rupees two thousand (Rs.2,000/-) for each bid. Bid Security of Rs. 20,000.00 for contracts No 3&4 each, Rs. 24,000.00 for contract No 2 and Rs. 40,000.00 for contract No 1** in Cash or Bank Guarantee valid for 120 days from scheduled bid opening date obtained from a recognized commercial bank operating in Sri Lanka in favour of the Vice Chancellor, University of Jaffna should be accompanied with each bid.

6. Bidders are strongly advised to attend the **pre-bid meeting on 05.09.2014** in the board room of the University of Jaffna and visit each location before pricing.

7. Bids shall be delivered or sent by registered post to the Chairperson, Procurement Committee of University of Jaffna, Thirunelvely, Jaffna P.O Box 57, to reach on or before **14.00 hrs on 12.09.2014 or** be deposited in the tender box kept in the Registrar's office on or before the above date and time. . Bids will be opened soon after closing the Bids, in the presence of the bidders' representatives who choose to attend.

8. Bids shall be Valid for a period of 91 Days from the date fixed for closing of Bids or any extended period.

Chairperson,
Procurement Committee,
University of Jaffna, Thirunelvely, Jaffna.
20.08.2014

(C/3787)

# வீதிகளில் கட்டாக்காலி நாய்கள் பாதசாரிகள் அசௌகரியம்



(கொழும்புத்துறை)


கொழும்புத்துறை மற்றும் புங்கன்குளம் பகுதிகளில் கட்டாக்காலி நாய்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளதாகவும் இதனால் பயணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாகவும் விசனம் தெரிவித்துள்ளனர்.

அதிகாலை வேளைகளில் தொழில் நிமித்தம் செல்வோரும் ஆலய வழிபாடுகளுக்குச் செல்வோரும் இக்கட்டாக்காலி நாய்களால் பெரும் இன்னல்களுக்கு முகங்கொடுப்பதாக கவலை தெரிவித்துள்ளனர்.

அது மட்டுமன்றி தற்போது பெய்து வரும் மழையுடன் இந்தக் கட்டாக்காலி நாய்கள் வீதிகளில் மலங்கழிப்பதால் அப்பகுதிகளில் நடமாட முடியாத நிலை காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை 7 மணியளவில் கன மழை பெய்து கொண்டிருந்தபோது ஆலயத்திலிருந்து வீடு நோக்கி வந்து கொண்டிருந்த இரு சகோதரர்களை இந்தக் கட்டாக்காலி நாய்கள் துரத்தியதில் அவர்கள் விழுந்து காயங்களுக்குள்ளானதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே, இந்தக்கட்டாக்காலி நாய்களின் உரிமையாளர்கள் கவனமெடுத்து அவற்றைக் கட்டி வளர்க்க வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



இணுவில் கந்தனின் உலகப் பெருமஞ்சத்தை உருவாக்கிய மகான் பெரிய சன்னியாசியாரின் சிலை ஊர்வலமும் பிரதிட்ஷையும் கடந்த புதன்கிழமை நடைபெற்றன. இதன்போது சன்னியாசியாரின் உருவச்சிலை அடியார்கள் சகிதம் இணுவில் மஞ்சத்தடி முருகன் ஆலயத்தில் இருந்து இணுவில் கந்தசுவாமி ஆலயத்திற்கு ஊர்வலமாக எடுத்துவரப்பட்டது. (48)

# யாழ். முஸ்லிம் மையவாடிக்கு புதிய மின் இணைப்பு வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ். முஸ்லிம் பகுதியில் கடந்த 24 வருடங்களாக இருள் மயமாகக் கிடந்த மையவாடி தற்பொழுது புதிய நான்கு மின் கம்பங்களை அமைத்து மின் ஒளியில் பிரகாசமாக அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்த ஏற்பாட்டை யாழ். மாநகர சபையின் ஈ.பி.டி.பி. உறுப்பினர் பி.எஸ்.எம். சரபுல் அனாம் அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்கு கொண்டு வந்ததையடுத்து, அமைச்சரின் உத்தரவில் மையவாடி மிகவும் பிரகாசமாக காட்சியளிக்கின்றது. இதனால் யாழ். முஸ்லிம் மக்கள் அனைவரும் மிகவும் மகிழ்ச்சியடைவதாகத் தெரிவித்துள்ளனர். இம்மின் இணைப்பை வழங்குவதற்கு உறுதுணையாக இருந்த முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா, மின் அத்தியட்சகர் திருவாளர் அருளானந்தன் அனைவருக்கும் யாழ். முஸ்லிம் மக்கள் நன்றிகளைத் தெரிவித்தனர்.

# ம்ணி விழா காணும் நாயகனுக்கு இந்து மத இணைப்பாளர் வாழ்த்து



(சுன்னாகம்)

மணிவிழா காணும் சுன்னாகம் ஸ்ரீ கதிரமலை சிவன் கோவில் பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ நா. சர்வேஸ்வருக்கு ஜனாதிபதியின் இந்து மத அலுவல்கள் விவகார இணைப்பாளர் பிரம்மஸ்ரீ ராமச்சந்திரக் குருக்கள் பாபு சர்மா தனது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

சர்வேஸ்வரர் குருக்கள் சிறந்த ஆன்மீக சொற்பொழிவாளர் இலங்கையிலும் பிறநாடுகளிலும் தனது பேச்சாற்றலால் இந்து மக்களின் மனதை கவர்ந்தவர் பல கும்பாபிஷேகங்கள், மஹோற்சவங்கள் பலவற்றை உலகம் பூராவும் செய்து வருபவர் கப்பித்தாவத்தை கைலாசநாத ஆலயத்தின் மஹோற்சவத்தையும் பலவருடங்களாக செய்து வருபவர்.

இவரது இந்து மத குருத்துவம் இந்து மக்களுக்கு கிடைத்த பாக்கியமாகும் இவரது ஆன்மீக சேவை தொடர இறைவன் அருள் புரியவேண்டும் எனவும் பாபுசர்மா தெரிவித்தார்.

# இவர்களை நம்பும்வரை தமிழ் மக்களுக்கு விமோசனமில்லை...




வடக்கு மாகாண சபைக்கு வந்த நிதி போதாது எண்டு முதலமைச்சர் தம்பட்டம் அடிச்சுக்கொண்டு திரியிறார். ஆனால் வந்த நிதி திரும்பிப் போகப் போகுது எண்டது முதலமைச்சருக்குத் தெரியுமோ? தெரியாதோ?

கடந்த பட்ஜெட்டில வடக்கு மாகாண சபைக்கு இலங்கையில் இரண்டாவது கூடுதலான நிதி ஒதுக்கப்பட்டிருந்தது.

அப்பிடி ஒதுக்கப்பட்ட நிதியை ஒழுங்காகப் பயன்படுத்தாமல் மூண்டில் ரண்டு பங்கு காசு இப்ப திரும்பிப் போற நிலையில இருக்கு. இதுக்கு யார் பொறுப்பு?

முதலமைச்சர் இதைப் பற்றி வாய் திறப்பாரா? அல்லது மனந்திறப்பாரா? அல்லது கண் திறப்பாரா?

வடக்கு மாகாண சபைக்கு நிதி காணாது. அரசாங்கம் திட்டமிட்டு இந்த மாகாண சபையை புறக்கணிக்குது எண்டமாதிரி எல்லாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாகாண சபை உறுப்பினர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் புலம்பிக்கொண்டே இருக்கினம்.

ஆனால் வடமாகாண சபையின்ர பட்ஜெட்டைப் பற்றிக் கேட்டாலோ வடமாகாண சபைக்கு ஒதுக்கப்பட்ட நிதியைப் பற்றிக் கேட்டாலோ ஒழுங்காகப் பதில் சொல்லுறதுக்கு ஒருதருக்கும் விபரமும் தெரியாது விளக்கமும் தெரியாது.

இப்பிடியான நிலையிலதான் மாகாண சபையில மன்னர்கள் இருக்கினம்.

அட, கொஞ்சம் விசயம் விளங்கின சுமந்திரன் போன்ற ஆக்கள் கூட சில வேளை வெங்காயக் கதைதான் கதைக்கினம்.

ஒதுக்கப்பட்ட நிதியை வைச்சு செய்யக்கூடிய வேலைகளை செய்யலாம். மீதி நிதியை தேவையெண்டு கோரலாம். ஆனால் வந்த காசையே பயன்படுத்தத் தெரியாமல் திரும்பிப் போக விட்டுட்டு அணில் ஏறவிட்ட நாய் போல ஏமிலாந்திக்கொண்டு இருக்கிற கூட்டமாக மாகாண சபைக்காரர் இருக்கினம்.

அரசாங்கத்தை திட்டித் திட்டியே தங்கட குறைகளை மறைக்கப் பாக்கினம்.

வாக்குப் போட்ட மக்களுக்கெண்டு வந்த காசை திரும்பிப்போக விடுகிற இந்தக் கூட்டம் மாகாண சபை உறுப்பினர் எண்ட பதவிச் சலுகைகளையும், பாராளுமன்ற உறுப்பினர் எண்ட பதவிச் சலுகைகளையும் ஆண்டு அனுபவிக்காமல் விடுகிறதில்லை.

தங்களுக்கெண்ட சலுகைகள் ஒண்டையும் விட்டுவிடாமல் அனுபவிக்கிற இவை சனங்களின் உரிமைகளை மட்டும் ஏன் பொருட்படுத்தாமல் விடுகினம். இது பச்சைத் துரோகம் அல்லவா?

ஆனால் இந்தத் துரோகத்தை தலைமுறை, தலைமுறையாக தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் மனங்கூசாமல் செய்து வருகினம். இப்படியெல்லாம் செய்துகொண்டு தாங்கள் தான் தியாகிகள் எண்டும், புனிதர்கள் எண்டும், நீதிமான்கள் எண்டும் வெளியில் காட்டுகினம்.

சொந்த மக்களின்ர தலையிலயே நெருப்பு வைக்கிற இந்தக் கூட்டத்தை நம்பித்தான் ஆதரிக்க வேண்டுமென்று பழச்சவையும், புத்திஜீவிகளும் சொல்லியும் வாக்களித்தும் வருகினம்.

எழுபது ஆண்டுகால அரசியல் வரலாற்றில உருப்படியாக ஒரு காரியத்தையாவது இந்தத் தேசியப் பித்தர்கள் செய்திருக்கிறார்களா?

இடதுசாரிகளை தூற்றி அவதூறு செய்து ஓரங்கட்டினார்கள்.

மாற்றுக் கருத்தாளர்களை துரோகிகள் எண்டு வசை பாடினார்கள்.

யதார்த்த வாதிகளை காட்டிக்கொடுப்போர் என்றார்கள்.

நியாயமாக நடப்போரை நம்ப முடியாதவர்கள் என்றார்கள்.

ஆனால் தங்களுடைய சுயநலத்தைப் பற்றியும் ஏமாற்றைப் பற்றியும் நடக்கவே நடக்காத அரசியல் அபிலாசையைப் பற்றியும் இவர்கள் கதைப்பதே இல்லை. எடுத்ததற்கெல்லாம் எதிரே நிற்பவரை குற்றஞ் சொல்லிக் குறை சொல்லியே மக்களை ஏமாற்றி வருகின்றனர்.

இவர்களை நம்பும்வரை தமிழ் மக்களுக்கு விமோசனமே இல்லை.

இதற்கு, மேலும் ஒரு உதாரணமே இப்ப மாகாண சபைக்கு வந்த நிதி திரும்பி மத்திய அரசுக்கே போவதும் ஆகும்.

வாழ்க்கையில் எப்போதும், சமாதானத்தையும் சகிப்புத்தன்மையையும் நமது இலட்சியமாக கொள்ள வேண்டும். - பாரதியார்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## அஞ்சேல் எனத் தாங்கும் துணை!

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் தேர்த்திருவிழா இன்று. நல்லூர் கொடியேறி விட்டாலே தொடர்ந்து இருபத்தைந்து நாட்களும் முருகனைத் தேடிவரும் பக்தர்களின் வெள்ளம் போன்ற அதிகரிப்பால் யாழ்நகரும் அதன் வீதிகளும் களைகட்டுவது வருடாவருடம் காணும் வாடிக்கை.

தள்ளுண்டேன் நெருக்குண்டேன் எற்றுண்டேன் என்றெல்லாம் ஔவை சொல்வது போல்தான் நல்லூர் சுற்று வீதிகளின் நடமாட்டம் இருக்கும். வெளிநாடுகளிலிருந்து இதற்கென்றே வந்திருந்தவர்களையும் அதிகமாகக் காணக்கூடியதாக இருக்கும். இம்முறையும் அப்படியே.

முருகன் என்பதே அழகன் என்ற பொருளில்தான் அமைந்திருக்கிறது. அதுமட்டுமல்ல, தமிழ்க்கடவுளாகவும் தெவிட்டாத இனியனாகவும் அறியப்படுபவன் அவன். இளமைக்கும் அவன்தான் அடையாளம்.

அதனால்தான் தந்தையாரின் திருவிளையாடல்களைப் போல அல்லாமல், முருகனின் விளையாட்டெல்லாம் முதியவர்களுடனான செல்ல விளையாட்டாகவே இருந்திருக்கிறது. இதனாலும் அவன் நமக்கு நெருங்கிய தோழனாகத் தெரிகிறான்.

மாம்பழத்துக்காகச் சண்டைபிடித்துக் கொண்டு மலையேறுவதாகட்டும், நாவல் மரத்திலேறி நின்று தமிழ்க் கிழவிக்குச் சுட்ட பழம் காட்டுவதாகட்டும், வள்ளியைக் கிழவனாக ஏய்ப்பதாகட்டும் எப்போதும் நம்மில் ஒருவனாகத் தோற்றம் காட்டிக் கொண்டிருப்பவன். எல்லோர் மனதுக்குப் பிடித்தவனாகவும் ஆகிறான்.

வளர்ந்து, பல கேள்விகளும் சந்தேகங்களும் உருவாகி, கடவுள் என்ற நம்பிக்கையை இழந்து போனவர்களுக்கும் கூட, அவர்கள் இந்துசமயத்தவராகப் பிறந்திருந்தால், முருகன் என்கிற திருவுரு (icon) அவர்களிடம் ஏற்படுத்தியிருக்கக் கூடிய வாஞ்சையும் வசீகரமும் எளிதில் அவர்களை விட்டு அகலாதது.

அவர்தம் குழந்தைகள் வடிவிலும் அவன்தான் சிரித்தபடியே தவழ்ந்து வருவதைத் தவிர்த்துவிட முடியாது.

அந்தவகையில் ஒரு கருத்தாகவே நம் வாழ்வுடன் ஒன்றித்துவிட்ட கடவுளாக முருகனைச் சொல்ல முடியும். முதுமை குறித்த அச்சமும் இயலாமையும் அடையாத மனிதரில்லை. அவர்களுக்கும் நம்பிக்கையளிக்கக் கூடிய கடவுளாக முருகன் இருக்கிறான்.

முதுமைக்கு மட்டுமல்ல, வாழ்க்கை முழுமைக்கும் எல்லோருக்கும் நம்பிக்கைகள்தானே தேவையாக இருக்கிறது. அதைக் கொடுப்பவர்களைக் கடவுளாகக் கொண்டாடுவதும் ஏற்புடையதுதானே!

நல்லூர்த் திருவிழா நடைபெறும் இருபத்தைந்து நாட்களும் யாழ்ப்பாணம் மட்டுமில்லாமல் நல்லூரையறிந்த இந்துக்கள் எங்கெங்கு இருந்தாலும் நல்லூர்க் கந்தனை நினைத்துக் கொள்கிறார்கள். விரதமிருக்கிறார்கள். கடைசித் திருவிழாக்களுக்காவது தவறாமல் வந்து சேருகிறார்கள்.

சிறுவர்கள் முதியவர்கள் பேதமில்லாமல் அனைவருக்கும் கொண்டாட்டத்தை அள்ளித் தருபவனாக முருகன் இருக்கிறான். "கருதிக் கருதிக் கவலைப் படுவார் கவலைக் கடலைக் கடியும் வடிவேல்" என்று பாரதி பாடுகிறான். அந்த நம்பிக்கையில்தானே இத்தனை மக்களும் அவனைத் தேடி வருகிறார்கள்.

வலிகளையும் வதைகளையும் வேண்டுமட்டும் அனுபவித்துவிட்ட மக்களுக்கு அவர்கள் மனக்காயங்களை மெல்ல மெல்ல ஆற்றி, அவர்களது இயல்பான வாழ்வுக்கு மீண்டும் முழுதாகத் திரும்புவதற்கு, அவர்கள் கந்தன் மீது கொண்டிருக்கும் பக்தியும் நேசமும் அவர்களுக்கு உதவட்டும்.

"பற்றயர்ந்து அஞ்சிய பரிவு கண்டணைந்து சற்றும் அஞ்சேல் எனத் தாங்கும் துணையாகவும்,

தளர்வெலாம் தவிர்த்து உட்கிளர்ந்திட உதவும் உறுதுணைக் காப்பாகவும், சவலை நெஞ்சகத்தின் தளர்ச்சியும் அச்சமும் கவலையும் தவிர்த்துக் கலந்திடும் நன்நட்பு"மாக....

நல்லூர்க்கந்தன் அவனை நம்புகின்ற–அவன் கோயில்கொண்டிருக்கும் நாட்டினது மக்கள் அனைவருக்கும் வாழ்வுத்தைரியம் தருபவனாக இருக்கட்டும்!

- ஆசிரியர்

# வடபகுதியை உலுக்கும் மோசடிப் பேர்வழிகள்

## கட்டுக்குள் கொண்டுவர முயற்சி

(யாழ்ப்பாணம்)

வடக்கில் என்றுமில்லாத அளவில் அதிகரித்துவரும் மோசடிகளைக் கட்டுப்படுத்த இப்போது நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வட மாகாணத்தில் இப்போது மோசடிகள் அதிகரித்து வருவதாக இலஞ்ச ஊழல்களுக்கு எதிரான சட்ட ஆலோசனை நிலையத்தின் வட பிராந்திய இணைப்பாளர் ரவீந்திர டீ சில்வா தெரிவித்துள்ளார்.

வட பகுதியில் நில அபகரிப்பு, இந்திய வீட்டுத் திட்டத்தில் மோசடி, ஊழல் மோசடி, நிதிப் பிரச்சினை தொடர்பான மோசடிகளே அதிகரித்து வருவதாக அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

கடந்த 20 நாட்களில் இவ்வாறான 600 முறைப்பாடுகள் எமக்கு கிடைக்கப் பெற்றுள்ளன. இவ்வருடம் ஜனவரி மாதத்தில் இருந்து ஜூலை மாதம் வரையிலான ஏழு மாத காலப் பகுதியில் இவை தொடர்பில் எமக்கு 929 முறைப்பாடுகள் கிடைத்தன.

அவற்றில் நிலப்பிரச்சினை, நிர்வாகப் பிரச்சினை, ஆவணங்களை பெறுவது தொடர்பான பிரச்சினை என்பன தொடர்பில் கிடைக்கப்பெற்ற 318 முறைப்பாடுகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள சிக்கலுக்குரிய முறைப்பாடுகள் குறித்து தொடர்புடைய திணைக்களங்கள், அதிகாரிகள் மற்றும் நபர்களுடன் கலந்துரையாடி பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுத்துவருகிறோம் எனவும் அவர் தெரிவித்தார்.

# பொலிஸ் திணைக்களம் இப்போது அரசியல் மயம்

## சாடுகிறார் ஐ.தே.கட்சி எம்.பி.

(கொழும்பு)

பொலிஸ் திணைக்களம் இப்போது கடுமையாக அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பாலித தெவரப்பெரும தெரிவித்துள்ளார்.

பொலிஸ் திணைக்களத்தில் வழங்கப்படும் பதவி உயர்வுகள் மற்றும் இடமாற்ற உத்தரவுகள் இவ்வாறு அரசியல் காரணங்களுக்காக வழங்கப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

திறமை அடிப்படையில் பதவி உயர்வு வழங்கப்படுவதில்லை எனவும், தண்டனை அடிப்படையில் இடமாற்றம் வழங்கப்படுவதில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் கொழும்பு பிராந்திய பிரதிக் காவல்துறை மா அதிபர் அனுர சேனாநாயக்க தான் தேர்தலில் போட்டியிட்டால் மூன்று இலட்சத்திற்கும் மேற்பட்ட வாக்குகளைப் பெற்றுக்கொள்ள முடியும் எனத் தெரிவித்திருந்தார்.

இவ்வாறான கருத்துக்கள் கண்டிக்கப்பட வேண்டியவை என அவர் குறிப்பிட்டுள்ளார். பொலிஸ் உத்தியோகத்தர்கள் இவ்வாறு கருத்து வெளியிட முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

# மோசடிக் கும்பலிடம் சிக்கி ஏமாற வேண்டாம்

## வேலைவாய்ப்பு பணியகம் கோரிக்கை

(கொழும்பு)

சுற்றுலா அல்லது கல்வி விஸாவில், டுபாய், மலேசியா போன்ற நாடுகளுக்கு தொழிலுக்காக ஆட்களை அனுப்பும் மோசடி வியாபாரம் குறித்து தகவல் கிடைத்துள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

சுற்றுலா மற்றும் கல்வி கற்பதற்காக வெளிநாட்டுக்கு அனுப்புவதாக பத்திரிகைகளில் விளம்பரம் செய்து அவர்களை அந்த நாடுகளில் தவிக்க விட்டுவிடுவதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் கூறியது.

இத்தகைய குழுக்கள் குறித்து பணியகம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக பணியகத் தலைவர் அமல் சேனாதிலங்கார தெரிவித்தார்.

கடந்த காலங்களில் இவ்வாறான பல சட்டவிரோத நடவடிக்கைகள் குறித்து பணியகத் விசேட விசாரணைப் பிரிவு தகவல் திரட்டியிருந்தது. இவ்வாறு சட்டவிரோதமாக சுற்றுலா மற்றும் கல்வி விஸாவில் சென்று தொழில் செய்து நட்டாற்றில் விடப்படுபவர்கள் தொடர்பில் பணியகம் எதுவித பொறுப்பும் ஏற்காது எனவும் அறிவிக்கப்படுகிறது.

இவ்வாறான ஏமாற்று நபர்களிடம் சிக்கி பணத்தை இழக்க வேண்டாம் எனவும் அத்தகையோர் குறித்து பணியகத்துக்கு அறிவிக்குமாறும் கோரப்பட்டுள்ளது.

# விசேட விவசாயத்திட்டம் மாத்தறையில் விரைவில்

## 3000 குடும்பங்களுக்கு விமோசனம்

(மாத்தறை)

மாத்தறை மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 10 பிரதேச செயலகப்பிரிவுகளில் வியாபார நோக்கில் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள ஹதபிம அதிகாரசபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

3000 விவசாயக்குடும்பங்களை நோக்காகக் கொண்டு மேற்கொள்ளப்படும் இந்த விவசாய நடவடிக்கையில் 3000 வீட்டுத்தோட்டங்கள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 9 ஆம் திகதி தொடக்கம் மாத்தறையில் நடைபெறவுள்ள தேசிய விவசாய வாரக் கண்காட்சியை முன்னிட்டு இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

குறிப்பாக மாத்தறை மாவட்டத்தில் நில அமைப்பிற்கேற்ப நிரந்தரப் பயிர்களை நடுவது சாத்தியமற்ற நிலையில் இவ்விடயங்களில் விற்பனை நோக்கிலான விவசாய உற்பத்திகளைப் பயிரிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்திட்ட பயனாளர்களுக்குத் தேவையான நவீன விவசாய தொழில்நுட்பம், விதைகள் மற்றும் ஏனையவற்றை ஹதபிம அதிகாரசபை வழங்கவுள்ளது.

இதனூடாகப் பெறப்படும் உற்பத்திப் பொருட்கள் மாத்தறை, வெலிகம, பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள விற்பனைப் பிரிவிற்கு வழங்கக்கூடிய விநியோக வலையமைப்புத் திட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக விவசாய அமைச்சு 40 இலட்சம் ரூபாய்களை இலங்கை ஹதபிம அதிகாரசபைக்கு வழங்கியுள்ளது என அவ்வதிகாரசபையின் தலைவர் நந்ததேச ஹேரத் தெரிவித்தார்.

# கூட்டமைப்புத் தலைமையின் இரட்டை வேட அரசியல்

சங்கர சிவன்

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் குழுவொன்று பிரதமர் நரேந்திர மோடியைச் சந்திப்பதற்காக இந்தியாவுக்குச் சென்றிருக்கின்றது. பதின்மூன்றாவது அரசியலமைப்புத் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தம் பிரயோகிக்க வேண்டும் என்று பிரதமர் மோடியிடம் இவர்கள் வேண்டுகோள் விடுப்பார்களாம். கூட்டமைப்புப் பிரதிநிதிகள் இந்தியாவுக்குப் புறப்படுவதற்கு முதல் நாள் “அதிகாரத்தைப் பகிர்ந்து நாட்டை ஐக்கியப்படுத்துவோம்' என்ற தொனிப்பொருளில் நடைபெற்ற ஊடகவியலாளர் மகாநாட்டில் எம்.ஏ.சுமந்திரன் இத்தகவலைக் கூறினார். இந்த ஊடகவியலாளர் மகாநாட்டுக்குப் பின்னால் உள்ள கதை அரசியல் முக்கியத்துவம் வாய்ந்தது. பலர் இதை மறந்திருக்கலாம் என்பதால் நினைவூட்டுவது பொருத்தமாக இருக்கும்.



பதின்மூன்றாவது அரசியலமைப்புத் திருத்தத்தை இரத்துச் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை சம்பிக்க ரணவக்க, விமல் வீரவன்ச, கோதாபய ராஜபக்ஷ போன்றோர் முன்வைத்த காலப் பகுதியிலேயே அதிகாரத்தைப் பகிர்ந்து நாட்டை ஐக்கியப்படுத்துவோம் என்ற தொனிப் பொருளில் பதின்மூன்றாவது திருத்தத்தைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் ஊடகவியலாளர் மகாநாடொன்று ஏற்பாடு செய்யப்பட்டது. அதுவே இன்று வரை தொடர்கின்றது.

***பதின்மூன்றாவது அரசியலமைப்புத் திருத்தம் பற்றிய இந்தியாவின் நிலைப்பாடும் தமிழ்த் தலைமையின் நிலைப்பாடும் ஒன்றுக்கொன்று முரண்பாடானவை. இந்தத் திருத்தத்தை இந்தியா அரசியல் தீர்வாகவே கருதுகின்றது. எனவே, இந்தியாவைப் பொறுத்த வரையில் மாகாண சபை அரசியல் தீர்வின் ஒரு அங்கம். தமிழ்த் தலைமை பதின்மூன்றாவது திருத்தத்தையும் மாகாண சபையையும் அரசியல் தீர்வாகவும் ஏற்கவில்லை. அரசியல் தீர்வின் ஆரம்ப கட்டமாகவும் ஏற்கவில்லை. இந்த முரண்பாட்டு நிலைப்பாட்டில் நின்று கொண்டு நடத்தும் பேச்சுவார்த்தை பலனளிப்பதாக இருக்க முடியாது.***


பதின்மூன்றாவது திருத்தத்தை நீக்க வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்ட காலத்தில் எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பு என்ற பெயரில் ஆட்சி மாற்றத்துக்கான அமைப்பொன்றை ஐக்கிய தேசியக் கட்சி உருவாக்கியிருந்தது. அதில் இப்போது அங்கம் வகிப்பவர்களான மனோ கணேசன், விக்கிரமபாகு கருணாரட்ண, எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் தான் மேற்படி ஊடகவியாளர் மகாநாட்டை ஏற்பாடு செய்தவர்கள். பதின்மூன்றாவது திருத்தத்தைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த ஊடகவியலாளர் மகாநாட்டில் பங்குபற்றுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியும் “எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பு” என்ற அமைப்பில் அங்கம் வகிக்கும் சிங்களக் கட்சிகளும் மறுத்து விட்டன. இன்று வரை அக்கட்சிகள் இந்த ஊடகவியலாளர் மகாநாடுகளின் பங்குபற்றிப் பதின்மூன்றாவது திருத்தத்துக்கு ஆதரவாக ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. ஆனால், மனோகணேசன், சுமந்திரன், விக்கிரமபாகு கருணாரட்ன ஆகியோர் இப்போதும் எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பு என்ற ஆட்சி மாற்ற அமைப்பில் அங்கம் வகிக்கின்றார்கள். அதாவது ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையில் ஆட்சி மாற்றத்துக்காக முயற்சிக்கின்றார்கள்.

எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பு என்ற அமைப்பின் சார்பில் இந்த ஊடகவிலாளர் மகாநாட்டை நடத்துவதற்கே மனோ கணேசன் முதலில் முயற்சித்தார். ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் அதற்குச் சம்மதிக்காததால் தனியாக ஊடகவியலாளர் மகாநாட்டை நடாத்த வேண்டி ஏற்பட்டது. ஒரு புறத்தில் பதின்மூன்றாவது திருத்தத்தைப் பாதுகாக்க வேண்டும் என்று ஊடகவியலாளர் மாநாடு நடத்திக் கொண்டு மறுபுறத்தில் அந்த ஊடகவியலாளர் மகாநாட்டில் பங்குபற்ற மறுத்தவரின் தலைமையில் ஆட்சி மாற்றத்துக்காக முயற்சிப்பதை எந்த வகை அரசியல் என்று சொல்வது? தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இந்திய விஜயமும் இந்த அரசியலைப் போன்றதே.

பதின்மூன்றாவது அரசியலமைப்புத் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப் படுத்துவதற்கு இந்திய அரசாங்கம் அழுத்தம் பிரயோகிக்க வேண்டும் என்று கூட்டமைப்புத் தலைவர்கள் பிரதமர் மோடியிடம் கோரிக்கை விடுத்திருக்கின்றார்கள். இதே நேரம் வடமாகாண சபையின் அதிகாரத்தைக் கைப்பற்றி வைத்துக் கொண்டு அதைச் செயற்படுத்தாமல் முடக்குகின்றார்கள்.

பதின்மூன்றாவது அரசியலமைப்புத் திருத்தத்தின் கீழ் மாகாண சபைகளுக்கு முப்பத்தேழு விடயங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. இவற்றுள் பொலிஸ் அதிகாரமும் காணி அதிகாரமும் எந்தவொரு மாகாண சபைக்கும் இதுவரை மத்திய அரசாங்கத்தினால் கையளிக்கப்படவில்லை. மற்றைய முப்பத்தைந்து விடயங்களிலும் மாகாண சபை நடவடிக்கை மேற்கொள்ள முடியும். மற்றைய மாகாண சபைகள் இந்த முப்பத்தைந்து விடயங்கள் தொடர்பாகவும் நடவடிக்கைகள் மேற்கொள்கின்றன. ஆனால், வடமாகாண சபை மாத்திரம் எந்த அதிகாரமும் இல்லை என்று தமிழ் மக்களின் காதில் பூச்சுற்றப் பார்க்கின்றது. இதேவேளை, வடமாகாண அபிவிருத்திக்கென ஒதுக்கப்பட்ட நிதியில் பெரும் பகுதி திரும்பிச் செல்லும் ஆபத்து இருப்பதாக ஆளுநர் எச்சரித்திருப்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

கைவசமுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி மாகாண சபையைச் செயற்படுத்தாமல் முழுமையான அதிகாரங்கள் வேண்டும் என்று பிடிவாதம் பிடிப்பதற்குப் பின்னால் ஒரு அரசியல் நோக்கம் இருப்பதாகவே தெரிகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வை ஒருபோதும் விரும்பவில்லை. அது அரசியல் அரங்குக்கு வந்த நாளிலிருந்து எந்தச் சந்தர்ப்பத்திலும் அரசியல் தீர்வை வலியுறுத்தவில்லை. இது வரை கூட்டமைப்பிடம் ஒரு தீர்வுத் திட்டம் இல்லை. இனப்பிரச்சினையிலிருந்து தமிழ் மக்களின் கவனத்தைத் திசை திருப்பும் வகையிலேயே இன்று வரை கூட்டமைப்பு செயற்படுகின்றது. இனப்பிரச்சினைக்குத் தனிநாடு தான் தீர்வு என்ற நிலைப்பாட்டைக் கொண்டிருக்கும் புலம் பெயர் அமைப்புகளின் வழிகாட்டலிலேயே கூட்டமைப்பு செயற்படுகின்றது என்ற குற்றச்சாட்டும் உண்டு. மாகாண சபையைச் செயற்படுத்துவது அரசியல் தீர்வின் ஆரம்பமாக ஆகிவிடலாம் என்று கருதுவதாலேயே வடமாகாண சபையை முடக்குகின்றார்கள். இந்த நிலையில் பதின்மூன்றாவது திருத்தத்தின் முழுமையான அதிகாரங்கள் என்ற கோரிக்கையுடன் இந்திய விஜயம் மேற்கொள்வதன் மூலம் தமிழ் மக்களுக்குப் பந்தா காட்டுகின்றார்கள் என்றுதான் சொல்ல வேண்டும்.



காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இருந்த காலத்திலும் கூட்டமைப்புப் பிரதிநிதிகள் குழு பல தடவைகள் இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டிருக்கின்றது. அப்போதும் பதின்மூன்றாவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப் படுத்த வேண்டும் என்ற கோரிக்கை தான். எதுவும் நடந்ததாக இல்லை. இந்திய அரசாங்கம் உரிய முறையில் அழுத்தம் பிரயோகிக்கவில்லை என்று இன்று கூட்டமைப்பு வட்டாரங்கள் கூறுகின்றன. இன்றைய பிரதமர் நரேந்திர மோடி கண்டிப்பானவர் என்பதால் நம்பிக்கை வைக்க முடியும் என்றும் சொல்கின்றார்கள். இந்தியாவின் பங்களிப்பு தொடர்பான முக்கியமான ஒரு அம்சத்தைக் கூட்டமைப்புத் தலைவர்கள் கவனத்தில் கொள்வதாகத் தெரியவில்லை.

பதின்மூன்றாவது அரசியலமைப்புத் திருத்தம் பற்றிய இந்தியாவின் நிலைப்பாடும் தமிழ்த் தலைமையின் நிலைப்பாடும் ஒன்றுக்கொன்று முரண்பாடானவை. இந்தத் திருத்தத்தை இந்தியா அரசியல் தீர்வாகவே கருதுகின்றது. எனவே, இந்தியாவைப் பொறுத்த வரையில் மாகாண சபை அரசியல் தீர்வின் ஒரு அங்கம். தமிழ்த் தலைமை பதின்மூன்றாவது திருத்தத்தையும் மாகாண சபையையும் அரசியல் தீர்வாகவும் ஏற்கவில்லை. அரசியல் தீர்வின் ஆரம்ப கட்டமாகவும் ஏற்கவில்லை.

இந்த முரண்பாட்டு நிலைப்பாட்டில் நின்று கொண்டு நடத்தும் பேச்சுவார்த்தை பலனளிப்பதாக இருக்க முடியாது. இந்திய அரசாங்கம் வழங்கிய ஆலோசனைகளுக்கு இந்தியாவில் தலையாட்டிய கூட்டமைப்புத் தலைமை இலங்கைக்கு வந்ததும் அவற்றை நிராகரிப்பதே வழமையாக இருந்தது. மேலே குறிப்பிட்ட முரண்பாடுதான் இதற்குக் காரணம். பதின்மூன்று பிளஸ் பற்றிய தமிழ்த் தலைமையின் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட காங்கிரஸ் அரசாங்கம் அதை அடைவதற்கான ஒரு வழியாக நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் பங்குபற்றி அக்கோரிக்கையை முன்வைக்குமாறு ஆலோசனை வழங்கியது. மாகாண சபையை அரசியல் தீர்வாக இந்தியா கருதியதாலேயே அரசியல் வழிமுறையான நாடாளுமன்றத் தெரிவுக் குழுவைச் சிபார்சு செய்தது. இந்தியாவில் அந்த ஆலோசனைக்குத் தலையாட்டிய கூட்டமைப்புத் தலைவர்கள் இலங்கைக்கு வந்ததும் அதை நிராகரித்தார்கள். இவர்கள் மாகாண சபையை வெறும் நிர்வாக அமைப்பாக கருதுகின்றார்களேயொழிய அரசியல் தீர்வாகக் கருதவில்லை. அரசியல் தீர்வை நோக்கமாகக் கொண்டு நியமிக்கப்பட்டதே நாடாளுமன்றத் தெரிவுக் குழு. அதில் பங்குபற்றி மாகாண சபைக்குக் கூடுதல் அதிகாரங்கள் வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைப்பது மாகாண சபையை அரசியல் தீர்வாக அங்கீகாரிப்பதற்குச் சமனாகிவிடும் என்று கூட்டமைப்பு கருதுகின்றது. நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை நிராகரிப்பதற்குக் கூட்டமைப்புத் தலைவர்கள் என்ன தான் காரணங்களைக் கூறினாலும் இதுதான் உண்மையான காரணம்.

இந்தியாவின் நிலைப்பாட்டை நிராகரித்துக் கொண்டு இந்தியாவின் உதவியை எதிர்பார்ப்பதைப் போன்ற முட்டாள்தனம் வேறெதுவும் இல்லை. பதின்மூன்றாவது திருத்தம் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு என்பது தான் இந்தியாவின் நிலைப்பாடு. அது அரசியல் தீர்வல்ல என்றால் இந்திய - இலங்கை ஒப்பந்தம் சாரமற்றதாகிவிடும்.

கூட்டமைப்புத் தலைமை இந்தியாவுக்கு ஒரு முகமும் மேற்கத்திய நாடுகளுக்கும் புலம் பெயர் அமைப்புகளுக்கும் இன்னொரு முகமும் காட்டுகின்றது. பதின்மூன்றாவது திருத்தத்தை ஏற்பதாக இந்தியாவுக்குக் காட்டும் முகம். பதின்மூன்றாவது திருத்தத்தை நிராகரிப்பதாக மேற்கத்திய நாடுகளுக்கும் புலம் பெயர் அமைப்புகளுக்கும் காட்டும் முகம். இந்த இரட்டை வேட அரசியல் தமிழ் மக்களுக்குப் புதுப்புதுப் பிரச்சினைகளைக் கொண்டு வருமேயொழிய எந்தப் பிரச்சினைக்கும் தீர்வைத் தராது.

பதின்மூன்றாவது திருத்தத்திலும் பார்க்கக் கூடுதலான அதிகாரங்களைக் கொண்ட ஒரு தீர்வு உடனடியாக சாதகமானதாக இல்லை. எனவே, பதின்மூன்றாவது திருத்தத்தை அரசியல் தீர்வின் ஆரம்ப கட்டமாக ஏற்றுக்கொண்டு கட்டங் கட்டமாக மேலதிக அதிகாரங்களைப் பெற்று அரசியல் தீர்வை நோக்கிச் செல்வது தான் ஆக்கபூர்வமான அணுகுமுறை. இது இந்தியாவுக்கும் உடன்பாடானதென்பதால் இந்தியாவின் உதவியையும் பெற முடியும்.

பதின்மூன்றாவது திருத்தத்தை அரசியல் தீர்வின் ஆரம்ப கட்டமாகக்கூட ஏற்க முடியாது என்பதில் கூட்டமைப்புத் தலைவர்கள் பிடிவாதமாக இருப்பார்களேயானால் அவர்கள் சிபார்சு செய்யும் அரசியல் தீர்வு எது என்பதை யாவது மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும். இரண்டும் இல்லையென்ற நிலை அரசியல் தீர்வு தேவையில்லை என்ற நிலைப்பாட்டையே வெளிப்படுத்தும்.

# அமெரிக்காவின்போக்கு இலங்கைக்கு எதிரானது அல்ல

## பிரசாத் காரியவசம் தெரிவிப்பு



அமெரிக்கா இலங்கைக்கு எதிராக செயற்படவில்லை என அந்நாட்டுக்கான இலங்கைத் தூதுவர் பிரசாத் காரியவசம் தெரிவித்துள்ளார்.

மனித உரிமை விவகாரங்கள் தொடர்பிலேயே இலங்கை குறித்து கருத்து வெளியிட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவிற்கும் இலங்கைக்கும் இடையில் சிறந்த இராஜதந்திர உறவுகள் நீடித்து வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

இரு தரப்பு உறவுகளை வலுப் படுத்திக்கொள்ளும் நோக்கில் இலங்கை ராஜதந்திரிகள் அமெரிக்க அதிகாரிகளுடன் அடிக்கடி சந்திப்புக்களை நடாத்தி வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை தொடர்பில் அமெரிக்கா இப்போது சரிவர புரிந்து கொள்ளத் தொடங்கியுள்ளதாகவும தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும், தமிழக அரசியல்வாதிகள் தொடர்ச்சியாக இலங்கை எதிர் கொள்கைகளை பின்பற்றி வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

தமிழகத்தின் நிலைப்பாட்டில் எவ்வித மாற்றங்களையும் காண முடியவில்லை எனவும் அவர் சுட்டிக காட்டியுள்ளார்.

# ஜானக பெரேரா கொலை முன்னாள் புலி உறுப்பினர் ஒப்புதல்



வடமத்திய மாகாணசபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா உட்பட 29 பேரை குண்டுத் தாக்குதலில் கொலை செய்த புலிகள் இயக்கத்தில் கேணல் நிலையில் இருந்த உறுப்பினர், தனது குற்றத்தை நீதிமன்றத்தில் ஒப்புக்கொண்டார்.

இந்நிலையில், இவருக்கு எதிரான தீர்ப்பு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 29ஆம் திகதி வழங்கப்படும் என்று வடமேல் மாகாண மேல் நீதிமன்ற நீதிபதி நுனந்த குமார ரத்நாயக்க கூறினார்.

புலிகள் இயக்கத்தில் கேணல் பதவிநிலை வகித்தவரும் செங்கலடியைச் சேர்ந்தவருமான சண்முகநாதன் சுதாகரன் என்பவரே குற்றத்தை ஒப்புக் கொண்டுள்ளார்.

கடந்த 2008ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 6ஆம் திகதி, குண்டுத் தாக்குதலை நடாத்தி ஜானக பெரேரா உட்பட 29 பேரை கொலை செய்தார் என்று இவருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளது. இந்த வழக்கு விசாரணை, நேற்று முன்தினம் இடம்பெற்ற நிலையிலேயே அவர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஐ.நா.விசாரணைக்கு ஒத்துழைப்பு மேலும் பல நாடுகள் மறுப்பு

(கொழும்பு)

ஐ.நா. விசாரணைக்குழுவுக்கு ஒத்துழைப்பு வழங்கமேலும் சில நாடுகள் மறுப்புத்தெரிவித்துள்ளன.

இந்தியா, சீனா, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் ஐ.நா. விசாரணைக் குழுவுக்கு தகவல்களை வழங்குவதனை நிராகரித்துள்ளதாக சிங்கள பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை இலங்கைக்கு எதிராக விசாரணைகளை நடாத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. வன்னியில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது சீனா, பாகிஸ்தான் மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் பல்வேறு வழிகளில் அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்கியிருந்தன.

தகவல்களை வழங்க குறித்த நாடுகள் மறுத்துள்ளமை ஐக்கிய நாடுகள் விசாரணைக்குழுவுக்கு சிக்கலை உருவாக்கியுள்ளது. விசாரணைகளுக்காக வெளிநாடுகளிடமிருந்து தகவல்களை பெற்றுக்கொள்ளவுள்ளதாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை அறிவித்திருந்தார்.

எனினும் விசாரணைக்குழுவின் நடவடிக்கைகளை இந்தியா, பாகிஸ்தான் மற்றும் சீனா ஆகிய நாடுகள் ஏற்றுக்கொள்ளவில்லை என சிங்களப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

# பிரித்தானிய தூதரகத்தின் செல்லப்பிள்ளைகள் இரு அமைச்சர்கள் மீது குற்றச்சாட்டு

அமைச்சர்கள் இருவரின் பொழுது போக்குப் பயணங்களுக்கு லண்டன் தூதரகம் பணம் செலவிட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

லண்டனுக்கான இலங்கைத் தூதரகத்தினால் இரண்டு அமைச்சர்களின் பொழுது போக்குப் பயணச் செலவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.இந்த விவகாரம் தொடர்பில் அவர் நாடாளுமன்றில் கேள்வி எழுப்பியுள்ளார்.இது தொடர்பில் வெளிவிவகார அமைச்சு விளக்கமளிக்க வேண்டுமென ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சு மறுத்த போதிலும் அரசாங்கத்தின் பணம் அமைச்சர்களின் தனிப்பட்ட தேவைகளுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

தேவை ஏற்பட்டால் இந்தக் குற்றச்சாட்டுக்கள் குறித்த தகவல்களை அம்பலப்படுத்த முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலான ஆதாரங்கள் இருப்பதாகவும் இரகசியமாக ஆதாரங்களை வழங்க முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்தக் குற்றச்சாட்டுக்கள் அடிப்படையற்றவை என பிரதி வெளிவிவகார அமைச்சர் நியோமல் பெரேரா தெரிவித்துள்ளார்.

# மகளிர் மாநாடு இன்று

குண்டசாலை தேர்தல் தொகுதியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மகளிர் மாநாடு இன்று காலை 9.00 மணிக்கு பல்கொல்ல மைதானத்தில் நடைபெறும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி குண்டசாலை பிரதான அமைப்பாளரும் தகவல் ஊடகத்துறை அமைச்சருமான கெஹெலிய ரம்புக்வெலவின் தலைமையில் கூட்டம் நடைபெறும்

இந்தக் கூட்டத்தில் பிரதம அதிதிகளாக அமைச்சர்களான ஏ. எச். எம். பௌசி, பந்துல குணவர்த்தன, பிரதி அமைச்சர் சரத்குமார குணரத்ன. மாலனி பொன்சேகா எம்.பி. ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# சமுர்த்தி அதிகாரிகளுக்கு விழிப்புணர்வு செயலமர்வு


சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பில் சமுர்த்தியாளர்களை தெளிவுபடுத்தும் நிகழ்வொன்று நேற்றுக்காலை பத்தரமுல்ல எங்கள் கிராமம் வளாகத்தில் அமைந்துள்ள கேட்போர் கூடத்தில் ஆரம்பமானது.

600 சமுர்த்தியாளர்கள் பங்குகொள்ளும் இந்த தெளிவுபடுத்தும் நிகழ்வு சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவின் வழிகாட்டலில் திவிநெகும அபிவிருத்தி திணைக்களம் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகாரசபை ஆகியவற்றின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

கழிவுப்பொருள் முகாமைத்துவம்- உக்காத கழிவுப் பொருள் முகாமைத்துவம் என்பன தொடர்பில் குறித்த சமுர்த்தி அதிகாரிகள் தெளிவுபடுத்தப்பட்டனர். வீடுகளில் சேரும் கழிவுகள் மற்றும் உக்காத கழிவுப் பொருட்கள் என்பவற்றை அகற்றுதல் மற்றும் மீள் பயன்பாட்டுக்குட்படுத்தல் தொடர்பில் சமுர்த்தி அதிகாரிகளூடாக மக்களை தெளிவுபடுத்துவதே இச்செயலமர்வின் நோக்கமாகும்.

# அரச ஊழியர்களுக்கு கடிதம் எழுத தெரியாது

## மேல்மாகாணசபை உறுப்பினர் கவலை



இன்று அரச ஊழியர்கள் அதிகமானோர் தொலைபேசிகளில் ...எம்.எஸ். குறுஞ்செய்தியை அதிகய பயன்படுத்துவதால், அவர்களுக்கு சரியாக ஒரு தொழில் முறைக் கடிதம் கூட எழுத முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாக மேல் மாகாண சபை உறுப்பினர் உதய பிரபாத் கம்மன்பில தெரிவித்துள்ளார்.

ஏதேனும் ஓர் இலக்கு இன்றி சிந்திக்கத் தொடங்கியுள்ள .அரச ஊழியர்களில் பெரும்பாலானோர் புதிதாக நியமனம் பெறும் போதேனும் குறிக்கோள் ஒன்றுடன் செயற்பட வேண்டும் எனவும் .சந்திரனை நோக்கிக் கல் எறிந்தால் சிலவேளை நட்சத்திரம் ஒன்றுக்கேனும் போய் படக்கூடிய வாய்ப்புள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேல் மாகாண சபையில் அரச முகாமை உதவியாளர்கள் 121 பேருக்கு நியமனம் வழங்கும் நிகழ்வு முதலமைச்சர் அலுவலகத்தில் நடந்தேறிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அரச ஊழியர்கள், "சார், நான் செய்துதான் அனுப்பினேன் என்றாலும் திருப்பி அனுப்பியிருக்கிறார்களே" என்று சொல்கிறார்கள். ஏன் மீண்டும் செய்து அனுப்பப்படுகின்றது என்பதை தேடிப்பார்த்தால், அவர்கள் எழுதியுள்ள கடிதங்களில் குறைபாடுகள்உள்ளமை தெரியவருகின்றது. இன்று எங்களுள் பெரும்பாலானோருக்கு கடிதம் ஒன்றுகூட எழுதத் தெரியவில்லை.

தற்போது எஸ்.எம்.எஸ் சேவையும், புதுப்புது கைப்பேசிகளும் வந்திருப்பதனால் கடிதம் எழுதும் ஆற்றல் மிகக் குறைந்துள்ளது. தொடர்பாடல் திறன் அரச சேவைக்கு மிகவும் வேண்டத்தக்கதாகும். எங்களுக்குள் இருக்கின்ற மிகப்பெரும் இயலாத்தன்மை கடிதம் ஒன்று எழுத முடியாத தன்மையாகும். அதற்குச் சிறந்த மாற்றுவழி என்னவென்றால் அவர்களுக்கு அதில் பயிற்சி வழங்கப்பட வேண்டும். திருப்பியனுப்பப்படுகின்ற ஏழு எட்டு கடிதங்களைக் கொண்டு வந்து, இவர்களுக்குக் காட்டி ஏற்பட்டுள்ள பிழைகளை அவர்களுக்கு எடுத்துக்காட்டி கற்பித்தால் அவர்கள் சரிவரக் கற்றுக் கொள்வார்கள் எனவும் உதய கம்மன்பில மேலும் தெரிவித்துள்ளார்.


# கூட்டமைப்பின் டில்லி யாத்திரையால் அரசுக்கு ஆபத்து இல்லை

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் இந்திய விஜயம் தொடர்பில் குழப்பமடையத் தேவையில்லை என அரசாங்கம் அறிவித்துள்ளது.

சம்பந்தன் தலைமையிலான பிரதிநிதிகள் குழுவொன்று இந்தியாவிற்கு விஜயம் செய்துள்ளது.

இந்த விஜயமானது அரசாங்கத்தை பாதிக்காது என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும், அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.இந்திய தலைவர்களை சந்திக்க வேண்டுமென தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் விடுத்த கோரிக்கையை அந்நாட்டு அரசாங்கம் ஏற்றுக்கொண்டு இந்த விஜயத்தை ஒழுங்கு செய்திருந்ததாக தெரிவித்துள்ளார்.இந்தியாவின் வெளியுறவுக் கொள்கைகள் தொடர்பிலேயே கவனம் செலுத்த வேண்டுமென அவர்தெரிவித்துள்ளார்.

இலங்கைப் பிரச்சினை குறித்து இந்தியாவின் நிலைப்பாடு எது என்பதே மிகவும் முக்கியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு ஏற்கனவே தெரிந்த விடயமே என அமைச்சர் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.




# இன்றைய இரதோற்சவ நன்னாளில் நல்லூர் கந்தனை கவிதையால் துதிசெய்வோம்



## வினை தீர்க்க வா!

தேர் ஏறி தேவ சேனாபதியோடு
தேவேந்திரன் தேவயானையும் வர
தேவாதிதேவா நீ தெருவெல்லாம்
வீதியுலாவந்து பாழ்வினை அறு
பரம்பொருளே பரந்தாமன் மருகனே
திறம் கொண்ட கிரவுஞ்சம் தகர்த்தவா
மாயங்கள் புரியும் மனிதர் மனம்
திருந்த வேலெடுத்து வினை
தீர்க்கவா.

-பேரின்பநாயகம் மண்டைதீவு-





## நல்லூர் முருகா!



நமக்குத் தெரியாமலே நாடு தினம் தினம்
நாசமாகிக் கொண்டு போகிறது முருகா!
உமக்கு இதுபற்றித் தெரிந்திருந்தும்
ஒன்றுமறியாதவர் போல இருக்கிறாயே!

வீடும் பிழைத்தது, வீதியும் பிழைத்தது
விவசாயமும் பிழைத்தது, வினாவும் பிழைத்தது
நாடும் பிழைத்தது, நம்பிக்கையும் பிழைத்தது
நல்லூர் முருகா! நானோ இதற்கு நாயகமோ?

-கே.எஸ்.சிவஞானராஜா கொக்குவில்-

## கசிந்துருகுகிறோம்!

நல்லூரிற் கந்தனே ஞான வடிவேலவனே முருகா
நாளும் உனைத் தொழுதோம் நல்லருள் தருவாய்
எல்லோரும் உனைப் பார்க்க ஓடோடி வந்தோம்
ஏழைபங்காளனே அருள ஏன் இன்னும் தாமதமோ?
பல்லோரும் பணிந்தேத்தும் பரமசிவன் திருமகனே
பாலசுப்பிரமணியனே உன் பக்தரைக் காத்திடையா!
கல்லான மனமும் கசிந்துருக காட்சிதரும்
நல்லூரின் நாயகனே! குமரா சரணம்! சரணம்!!

-கலாபூஷணம் இராசையா சிறிதரன்-

## சக்தி தரும் வேல்!

இன்று வள்ளி, தெய்வானையுடன் தேரிலே
பக்தர்கள் புடைசூழ வீதிவலம் வரும்
நல்லூர் வீதியிலே அடியவர்கள் கால்தடம் பதித்தால்
பொல்லாத வினைகள் எல்லாம் போய்விடுமே
ஆதி மூலத்தில் இருக்கும் வேலுக்கு ஓர் காந்த சக்தி
அந்த வேல் இன்று ஆறுமுகசாமியாக தேரேறிவந்து
மக்கள் துயர், துன்பங்கள் தீர்த்திட அருள்புரிந்து
சுந்தர நல்லூரில் சோதி ஒன்று தோன்றுகிறது பார்.

-க.கனகசபை சண்டிலிப்பாய்-

## தேரேறிவருகிறான் வேலவன்!

பார் நிறைந்து வணங்க தேர் ஏறிவருகிறான்
பார், கார்வண்ணன் மருகன் காசினியில்
தேரானதோர் தேர்ஏறி தேவன் மகன் வருகிறான் நல்லூர்
தெருவெலாம் வேத மொலிக்க ஞானம் சிறக்கும்
தாராள வரம் தந்தருள்வான் சண்முகன்! தாழ்
தொழ மாளாதபேரின்பால் அருள்வான், பார்
தேராத பெருவாழ்வு தந்தணைவான், கண்டு தொழ
அப்பன் செப்பரிய தேர் ஏறிவருகிறான், காண்!

-மண்டைதீவு மகிழ்நன்-

## தங்கத்தேர் கிலுங்கிவரும்!

இரதமேறி முருகன் வருகிறான்
ரண வினை யிலிருந்தெமைக்காக்கவே!
இதமேக நல்லூரின் வீதிகளில்
இருமாதர் துணையோடு வருகிறான்!

வெண்பரிதி முன்பூட்டி இரதமேகும்
வெள்ளமாக பக்தகோடி தரிசிக்கும்!
வெண்மணலில் வெற்றுடல் வேகவேக
விரதமிரு பக்தர்களின் பிரதட்டை!

தங்கத்தேர் சலங்கைகள் கிலுங்கிவர
தடையின்றி அரோகரா ஒலிமுழங்கும்!
மங்கையர் தலைகளில் கற்பூரச்சட்டி
மட்டுமிலா அடிபணிந்து அடிஅளிப்பர்!

சங்கிலுக்கு நல்லூரில் அரியணைசெய்
சரவணனே சங்கரித்து எம்வாழ்வை!
இங்கிதம் துலங்கிடச் செய்திடும்
இரதத்தில் ஏறிவந்தே இரட்சியும்!

நல்லூரின் முருகனுக்கு இன்றென்ன
நாளெலாம் தேரோடும் காணவாரீர்!
இல்லாமல் எங்களது வாழ்வுரதம்
இம்மியும் அசையாது என்றறிவீர்!

-'கவிமணி' பரமகவி-

## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

நல்லூர் கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடாத்தும் ஆன்மீக சிந்தனையும் சமயச் சொற்பொழிவும் கலைநிகழ்வுகளும் தினமும் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்று வருகின்றன.

இதில் தேர்த்திருவிழாவான இன்று காலை விசேட நிகழ்வாக செல்வன் அழகேசன் அமிர்தசிந்துஜன், செல்வன் பரமேஸ்வரன் கௌரீசன் ஆகியோர் வழங்கும் பண்ணிசைக் கச்சேரியும் தொடர்ந்து திருமதி புஸ்பமலர் யோகநாதனின் மாணவர்களது இன்னிசைக் கச்சேரி பொன்னாலை வரதராஜர் கோவில் கண்ணன் பஜனைக குழுவினரின் பஜனை நிகழ்வு என்பன இடம் பெறவுள்ளன.

மாலை நிகழ்வுகளாக உதித்தனன் உலகம் உய்யஎன்னும் விடயம் பற்றி ஆ.சிவநாதன் சிறப்புச்சொற்பொழிவு ஆற்றவுள்ளார். தொடர்ந்து அராலி கலைவாணி இந்து சமய அபிவிருத்திச் சங்கம், கந்தரோடை அருளானந்தப்பிள்ளையார், சிறுப்பிட்டி அண்ணமார் அம்பாள் ஆகிய அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

◆ ◆ ◆

நல்லூர் கந்தன் உற்சவத்தை முன்னிட்டு இளங்கலைஞர் மன்றம் தெல்லிப்பளை துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடாத்தும் தெய்வீக இசையரங்கு நிகழ்வு தினமும் மாலை 6.45 மணி முதல் 8.15 மணிவரை நடைபெற்று வருகிறது.

இதில் தேர்த்திருவிழாவான இன்று ஏ.கே.கருணாகரனின் பாட்டு இசையரங்கம் பக்கவாத்திய சகிதம் இடம்பெறவுள்ளது. (42)

## மாநிலம் மகிமை பெற இரத மேறி வருக!

மாந்தர் துயர் நீங்கிட மாநிலம் மகிமை பெற
மாயவன் மருகா இரதமேறி வருக.
தர்மம் ஓங்கிட தானம் ஓங்கிட தமிழ் வேதம் ஒலித்திட
தமிழ் தெய்வமே இரதமேறி வருக.
அன்பர் கூடி துதிகள் பாடிட நல்லை வீதியிலே
பார்வதி பாலகா இரத்மேறி வருக.
நல்லை நகர் நாடி வந்தோர் குறைகள் நீங்கிட
நாதா ஷண்முகா இரதமேறி வருக.
தமிழனுக்கோர் தீர்வு கிடைத்திட தரணியில்
சாந்தி நிலவிட இரதமேறி வருக.

-தொல்புரத்தூர்.க.லோகேஸ்வரன்-

## தேரிலே வருகிறான்!

தேரிலே ஊரவருந் தேவர்சிறை மீட்டவனை
நேரிலே பார்த்து நினைந்துருகி - பூரித்து
கும்பிட் டுருண்டு கூத்தாடிப் பாடியே
நம்பிநல் லூரனை நாடு.


தேர்வடத்தை நல்லூரிற் தொட்டபடி வீதியிலே
ஈர்க்கும் பணியை எதிர்பார்த்துக் - காக்கிறார்
வெயிலிலே வாடி வியர்த்துக் களைத்தாலும்
உய்வுதரும் தொண்டென் றுணர்ந்து.

-நல்லைக்கந்தன் பாமாலை-

## நல்லூரான் தேரேறி திருவீதி உலாவட்டும்

நல்லூரான் தேரேறித் திருவீதி உலாவட்டும்
பல்லோரும் பார்த்தவனைப் பாவங்கள் போக்கட்டும்
இல்லையென்ப தவனருளால் இல்லாமல் ஒழியட்டும்
தொல்லை வினையகன்று தூயஒளி பிறக்கட்டும்!
செல்லக் குமரனவன் சித்திரத்தேர் ஏறட்டும்
கொல்லும் கொடுமைகளைக் கொனறொழித்து அருளட்டும்
வல்லமையை வள்ளலவன் வாரிவாரிக் கொடுக்கட்டும்
நல்லடியார் நானிலத்தில் நனிசிறந்து ஓங்கட்டும்!
தில்லைக் கூத்தன்மகன் திருத்தேரில் திகழட்டும்
பொல்லா வினைபோக்க போரடித்துக் குவிக்கட்டும்
நில்லாமல் அசுரமெலாம் நிலைகுலைந்து ஓடட்டும்
எல்லையில்லா ஆனந்தம் எல்லோர்க்கும் கிட்டட்டும்!

-ஆசுகவி செ.சிவசுப்பிரமணியம் மூளாய்-



## தேர் வடம் இழுத்திடுவோம்!

தேரேறி யாழ் மண்ணில் வலம் வரும் கந்தா
மக்கள் படும் துன்பம் நீ அறிவாயா!
அன்னை உமையாளின் பாலகனே
மனமுருகி நீ வந்து காத்திடையா!
உன்னையே நம்பிவாழும் எம்மக்களுக்கு
இன்னல்களை நீக்கிடுவாய் இந்நாளிலே!
தேர் வடம் பிடித்து இழுத்து - உன்னை
மண்டியிட்டோம் நின்பாதங்கள் சரணமையா!
நல்லையம்பதியினிலே குடி கொண்ட முருகா
எந்நாளும் உன்னை போற்றுகிறோம்.
போற்றி! போற்றி!!

-தினமுரசு குடும்பம்-


# சுனில் நரைனிடம் சுருண்டது பங்களாதேஷ் தொடரை வென்றது மேற்கிந்தியதீவுகள்


பங்களாதேஷ் அணிக்கெதிரான இரண்டாவது ஒரு நாள் போட்டியில் மேற்கிந்தியத்தீவுகள் அணி பெரு வெற்றி பெற்றது. இதன் மூலம் ஒரு போட்டி எஞ்சியுள்ள நிலையில் ஒரு நாள் தொடரை மேற்கிந்தியத்தீவுகள் அணி கைப்பற்றிக் கொண்டது.

பங்களாதேஷ், மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் இரண்டாவது ஆட்டம் நேற்று முன்தினம் மேற்கிந்தியத்தீவுகளின் ஜிறோஷஸில் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

இதற்கமைய முதலில் ஆடிய மே.தீவுகள் அணி கிறிஸ் கெய்ல், பிராவோ ஆகியோரின் பொறுப்பான ஆட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் மேற்கிந்தியத்தீவுகள் அணி 50 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 247 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கிறிஸ் கெய்ல் 58, பிராவோ 52, ராம்டீன் 34, சிமன்ஸ் 40, போலாட் 26 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் மோட்ரோஷா மூன்று, அல் அமின் உசைன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 248 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய பங்களாதேஷ் அணி சுனில் நரைன், ரோச் ஆகி-யோரின் பந்து வீச்சிக்கு நிலைதடுமாறியதுடன் விக்கெட்டுக்களை மளமளவென பறிகொடுத்தது. ஒரு முனையில் தமிம் இக்பால் தாக்குப்பிடித்து ஆடியபோதிலும் மறுமுனையில் விக்கெட் சரிவை எவராலும் நிறுத்த முடியவில்லை. நிறைவில் பங்களாதேஷ் அணி 24.4 ஓவர்கள் நிறைவில், சகல விக்கெட்டுக்களையும் இழந்து 70 ஓட்டங்களுக்குள் சுருண்டது. இதில் தமிம் இக்பால் மட்டும் 37 ஓட்டங்களைப் பெற்றார். ஏனைய அனைத்து வீரர்களும் ஒற்றை இலக்க ஓட்டத்துடன் ஆட்டமிழந்து வெளியேறினர். பந்து வீச்சில் சுனில் நரைன், ரோச் ஆகியோர் தலா மூன்று, ராம்போல் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். போட்டியின் ஆட்டநாயகனாக சுனில் நரைன் தெரிவு செய்யப்பட்டார். இவ்வெற்றியின் மூலம் ஒரு போட்டி எஞ்சியுள்ள நிலையில் மேற்கிந்தித்தீவுகள் அணி ஒரு நாள் தொடரைக் கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# டோனிக்கு ஆதரவு

(ஹமில்டன்)

டெஸ்ட் போட்டிக்கு டோனியே பொருத்தமான தலைவர். இந்திய கிரிக்கெட் சபை அவரை நீக்க நினைக்குமிடத்து பெரும் விளைவுகளை எதிர் கொள்ள வேண்டிய சூழ்நிலை உருவாகும் என நியூசிலாந்து அணியின் முன்னாள் கப்டன் ஸ்ரீபன் பிளமிங் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து அணிக்கெதிரான டெஸ்ட் தொடரில் இந்திய அணியின் தோல்விக்கு டோனி மாத்திரம் பொறுப்பாக முடியாது. இதற்குப் பல காரணங்கள் உண்டு. சிறந்த பந்து வீச்சாளர்களை இந்திய அணி கொண்டிருக்க வேண்டும். முதலிரு டெஸ்ட் போட்டிகளில் சிறப்பாக பந்து வீசிய புவனேஸ்வர் குமாரால் ஏனைய போட்டிகளில் சிறப்பாகச் செயற்பட முடியவில்லை. ஏனைய பந்து வீச்சாளர்கள் இங் கிலாந்து துடுப்பாட்ட வீரர்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையில் செயற்படவில்லை. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் சிறப்பானதொரு அடித்தளத்தை அணிக்கு பெற்றுக்கொடுக்கவில்லை.

இதற்கு எல்லாம் டோனி மீது பழி போடுவது சிறந்ததல்ல. ஆனால், இது டோனிக்கே நெருக்கடியை கொடுத்திருக்கின்றது. நெருக்கடியான நேரத்திலும் அவர் சிறப்பாக துடுப்பாடி அணிக்குப் பலம் சேர்த்திருக்கின்றார். ஹோலி சிறந்த வீரர். எல்லா வேளைகளிலும் அவர் சிறப்பாக ஆடவேண்டும் என்று கருதுவது முட்டாள்தனமானது. சச்சினாக இருந்தால் என்ன? பிரட்மனான இருந்தால் என்ன? துடுப்பாட்ட வீரராக உள்ள அனைவருக்கும் இது போன்ற நிலைமை வரத்தான் செய்யும். பயிற்சிப் போட்டியில் ஹோலி சிறப்பாக ஆடியுள்ளார். அதன் மூலம் ஒரு நாள் தொடரில் சாதிப்பார் என்ற நம்பிக்கை எனக்குள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# சம்பியன் லீக் ருவென்ரி–20 செப்ரெம்பர் ஆரம்பம்

சம்பியன்ஸ் லீக் ருவென்ரி-20 கிரிக்கெட் போட்டிக்கான அணிகள் அறிவிக்கப்பட்டது. 6ஆவது சம்பியன்ஸ் லீக் ருவென்ரி- 20 கிரிக்கெட் போட்டி செப்ரெம்பர் 17ஆம் திகதி முதல் ஒக்ரோபர் 4ஆம் திகதி வரை மொகாலி, ஹைதராபாத், பெங்களூர் ஆகிய இடங்களில் நடை பெறவுள்ளது.

இந்த போட்டியில் விளையாட கொல்கத்தா நைட் ரைடர்ஸ் (இந்தியா), டொல்பின்ஸ் (தென்னாபிரிக்கா), பெர்த் ஸ்கார்ச்சர்ஸ் (அவுஸ்ரேலியா), சென்னை சூப்பர் கிங்ஸ் (இந்தியா, ஏ பிரிவு), கிங்ஸ் லெவன் பஞ்சாப் (இந்தியா), கேப் கோப்ராஸ் (தென்னாபிரிக்கா), ஹோபர்ட் ஹரிகேன்ஸ் (அவுஸ்ரேலியா), பார்படோஸ் டிரைடென்ஸ் (மே.தீவுகள் பி பிரிவு) ஆகிய 8 அணிகள் நேரடியாக தகுதி பெற்றுள்ளன.

முன்னதாக தகுதிச் சுற்று ஆட்டங்கள் செப்ரெம்பர் 13ஆம் திகதி முதல் 16ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன. இதில் லாகூர் லயன்ஸ் (பாகிஸ்தான்), மும்பை இந்தியன்ஸ் (இந்தியா), நார்த்தன் நைட்ஸ் (நியூசிலாந்து), சதர்ன் எக்ஸ்பிரஸ் (இலங்கை) அணிகள் மோதவுள்ளன. இதில் முதல் இரண்டு இடங்களைப் பிடிக்கும் அணிகள் பிர-தான சுற்றில் எஞ்சிய 8 அணிகளுடன் இணையும்.

சம்பியன்ஸ் லீக் ருவென்ரி- 20 போட்டியில் விளையாடும் அணிகளின் வீரர்கள் பட்டியலை போட்டி அமைப்பு குழு நேற்று முன்தினம் அறிவித்துள்ளது.

இந்தப் போட்டியில் 8 வீரர்கள் தங்கள் நாட்டின் உள்ளூர் கிளப் அணி தகுதி பெற்றிருந்தாலும் அதில் விளையாடுவதை தவிர்த்து, ஐ.பி.எல். அணிகளில் விளையாட முடிவு செய்துள்ளனர்.

# உலகக் கிண்ணத்தில் சாதிக்க ஆப்கான் புதிய வியூகம்

அவுஸ்ரேலியா, நியூசிலாந்து ஆகிய நாடுகளில் நடைபெறவுள்ள உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் சாதிக்கும் முனைப்புடன் ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணி தீவிரம் காட்டி வருகின்றது. அடுத்த வருடம் பெப்ரெவரி மாதம் நடைபெறவுள்ள உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் அவுஸ்ரேலியா, நியூசிலாந்து ஆகிய நாடுகளில் நடைபெறவுள்ளது. 2008ஆம் ஆண்டு உலக கிரிக்கெட் லீகில் டிவிஷன் 5இல் இருந்த ஆப்கானிஸ்தான் அணி அந்த நிலையிலிருந்து உலகக் கிண்ணக் கிரிக்கெட்டில் முதன் முதலாக தகுதி பெறும் நிலைக்கு உயர்ந்துள்ளது.

1980ஆம் ஆண்டுகளில் சோவியத் யூனியன் அங்கு ஆக்ரமிப்பு ஆட்சி செய்து கொண்டிருந்த போது, பாகிஸ்தானில் உள்ள அகதிகள் முகாமில் இருந்த இளைஞர்கள் பலர் தங்கள் கவனத்தை கிரிக்கெட் ஆட்டம் பக்கம் திருப்பினர். இன்று இரண்டு ருவென்ரி – 20 உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிகளில் விளையாடி, கிரிக்கெட் இரசிகர்களின் உள்ளம் கவர்ந்த அணியாகத் திகழ்கிறது ஆப்கான்.

இது குறித்து ஆப்கான் அணி பயிற்றுநர் கபீர் கான் கருத்துத் தெரிவிக்கையில், 2015 உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் சில பல அதிர்ச்சிகளை அளிக்க ஆப்கான் அணி தயார் நிலையில் உள்ளது. கடந்த மாதம் சிம்பாவே அணிக்கு எதிரான ஒருநாள் கிரிக்கெட் தொடரில் 2 போட்டிகளில் தோல்வி கண்ட நாங்கள் அதன் பின்னர் 2 போட்டிகளை வென்று தொடரை சமன் செய்தமை உண்மையில் அணி வீரர்களை உத்வேகப்படுத்தியுள்ளது.

மேலும், அடுத்த மாதம் அவுஸ்ரேலியா, நியூசிலாந்து நாடுகளுக்கு ஆப்கான் அணி செல்கிறது. அங்கு பல மாநில அணிகளுடன் பல போட்டிகளில் விளையாடி உலகக் கோப்பைக்கு முன்னர் அவுஸ்ரேலியா, நியூசிலாந்து தட்பவெப்பம், ஆடுகளம் போன்ற சூழலுக்கு வீரர்கள் தயார்ப்படுத்திக் கொள்வார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். பயிற்சியாளர் கபீர் கான், 1990ஆம் ஆண்டுகளில் பாகிஸ்தான் அணிக்காக 4 டெஸ்ட் மற்றும் 10 ஒருநாள் சர்வதேச போட்டிகளில் விளையாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. 14 அணிகள் பங்கேற்கும் உலகக் கோப்பைப் போட்டிகளில் ஆப்கான் அணி பிரிவு ஏ– பிரிவில் உள்ளது. முதல் போட்டியில் பெப்ரவரி 18ஆம் திகதி பங்களாதேஷ் அணியைச் சந்திக்கிறது. இதே பிரிவில் அவுஸ்ரேலியா, நியூசிலாந்து, இலங்கை, இங்கிலாந்து, மற்றும் ஸ்கொட்லாந்து ஆகிய அணிகள் உள்ளன.

# சவாலான தொடர்

## செரீனா வில்லியம்ஸ்

(நியூயோர்க்)

அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் தொடர் சவால் நிறைந்ததொரு போட்டி. இதில் கிண்ணம் வெல்வது என்பது இலகுவானதல்ல. உள்ளூர் இரசிகர்களின் ஆதரவுடன் கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொள்ள முயற்சிப்பேன் என அமெரிக்க வீராங்கனையும், முதல் நிலை வீராங்கனையுமான செரீனா வில்லியம்ஸ் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் நாளை ஆரம்பமாகவுள்ளது. இப்போட்டித் தொடர் குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே செரீனா மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், நடப்பு சம்பியன் என்பதால் என் மீது அதிக எதிர்ப்பு இருக்கும். அதனை ஈடுசெய்யும் வகையில் செயற்பட முயற்சிப்பேன். இனம்கண்டுகொள்ளப்படாத இளம் வீரர்கள் பலர் உள்ளனர். அவர்களை எதிர்கொள்வதில் அதிக கவனம் வேண்டும். இல்லையேல் சிறப்பாகச் செயற்பட முடியாது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# மசூட், அலம் பொறுப்பாட்டம்; போராடி வென்றது பாகிஸ்தான்




(அம்பாந்தோட்டை)

மசூட், எவ். அலம் ஆகியோரின் பொறுப்பான ஆட்டத்தின் மூலம் இலங்கை அணிக்கெதிரான முதலாவது ஒரு நாள் போட்டியில் பாகிஸ்தான் அணி போராடி வென்றது. இலங்கை, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் முதல் ஆட்டம் நேற்று அம்பாந்தோட்டையில் நடைபெற்றது. சீரற்ற கால நிலை காரணமாக இப்போட்டி 45 ஓவர்களைக் கொண்டதாக நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய இலங்கை அணி மொகமட் இர்பான், வகாப் றியாஸ் ஆகியோரின் பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் திணறியது. இதன் காரணமாக இலங்கை அணி முதல் மூன்று விக்கெட்டுக்களை 55 ஓட்டங்களுக்குள் பறிகொடுத்தது. இந்நிலையில் நான்காவது விக்கெட்டுக்காக இணைந்த கப்டன் மத்தியூஸ், மஹேல ஜெயவர்த்தன இணை பொறுப்புடன் ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை வேகமாக உயர்த்தியது. இந்த ஜோடி 116 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றவேளை மஹேல ஜெயர்த்தன ரன் அவுட் முறையில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து களமிறங்கிய வீரர்கள் அதிரடியாக ஆடி ஓட்டங்களை வேகமாகக் குவித்தனர். குறிப்பாக, இறுதி நேரத்தில் களமிறங்கிய அசான் பிரியன்ஜன் பாகிஸ்தான் பந்துவீச்சாளர்களை புரட்டியெடுத்து வேகமாக ஓட்டங்களைக் குவித்தார். இறுதியில் இலங்கை அணி நிர்ணயிக்கப்பட்ட 45 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 275 ஓட்டங்களைப் பெற்றது. இதில் மத்தியூஸ் 89, மஹேல ஜெயவர்த்தன 63, சங்கக்கார 25 ஓட்டங்களைப் பெற்றனர். அசான் பிரியன்ஜன் 15 பந்துகளை எதிர்கொண்டு எட்டு பவுண்டரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காது 39 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் மொகமட் இர்பான் இரண்டு, வகாப் றியாஸ் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 275 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய பாகிஸ்தான் அணி முதல் ஐந்து விக்கெட்டுக்களையும் 105 ஓட்டங்களுக்குள் பறிகொடுத்தது. இந்நிலையில் ஆறாவது விக்கெட்டுக்காக இணைந்த மசூட், எம். அலம் இணை பொறுப்புடன் ஆடி அணியின் ஓட்டங்களை வேகமாக உயர்த்தியது. இந்த ஜோடி 147 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றவேளை பிரிக்கப்பட்டது. தொடர்ந்து களமிறங்கிய அப்ரிடி அணியின் வெற்றியை உறுதிசெய்யும் வகையில் ஆடினார். இறுதியில் பாகிஸ்கான் அணி 44.5 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந் 277 ஓட்டங்களைப் பெற்று வெற்றியிலக்கை அடைந்தது. இதில் அகமட் சிஷாட் 49, எவ். அலம் 62, மொகமட் ஹபீஸ் 21 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர். மசூட் 73 பந்துகளை எதிர்கொண்டு ஒன்பது பவுண்டரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காது 89 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் மத்தியூஸ், திசர பெரேரா ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். போட்டியின் ஆட்டநாயகனாக மசூட் தெரிவு செய்யப்பட்டார்.

# நல்லூர் கந்தன் தேர்த்திருவிழா சிறப்புமலர் -2014



## "நெற்றிக்கு நடுவே புருவத்திடை வெளி உற்றுப் பார்க்கும் ஒளிவிடும் மந்திரம்"

நல்லைக்கந்தன் – அலங்காரக் கந்தன் திருவிழா என்றால் அனைவருடைய மனதிலும் குதூகலம் ஏற்பட்டு விடும். பெரியவர் பக்தியில் திளைப்பர். இளைஞர்கள் களியாட்டத்தில் மகிழ்வர். கலியுகவரதனாகிய முருகன், தமிழ்க்கடவுள் என்று போற்றப் படுபவன். நமது பாவவினைகள் நீக்கி நல்லருள் புரிய தேர் ஏறிவரும் திருநாள் நமது மக்களுக்கு புண்ணியதினமாகும்.

கந்தபுராணத்தில் நரகாசுரன் முருகனைப் பார்க்கிறான். தேரிலே முருகன் நிற்பதைப் பார்க்கிறான். முழுவதுமாகப் பார்க்கிறான். முடிமுதல் அடிவரை பார்க்கிறான்.

முழுமதியன்ன ஆறுமுகங்களும் முன்னான்காகும்
விழிகளின் அருளும் வேலும் வேறுள படையின்
சீரும்
அழகிய கரமீராறும் அணிமலர்த்தண்டை ஆர்க்கும்
செழு மலரடியும் கண்டான் அவன் தவம் செப்பற்பாற்றோ.

என்று கச்சியப்பர் அவன் தவத்தை வியக்கின்றார். அகந்தையில் அவரை நோக்கி அழியப் போகும் தாரகன் திருமுகங்கள், விழிகள், கரங் கள், திருவடிகள் என முடிமுதல் அடிவரை கண்டான், அழிந்தான் இருப்பினும் முருகனைத் தரிசித்த அவன் தவம் அளத்தற்கரியது என்பது கச்சியப்பர் கருத்து.

சூரன், சிங்கன், தாரகன் வரலாறு புகட்டும் பாடம் தான் தேரில் ஏறிவரும் முருகனின் காட்சிக்குத் தத்துவமாகும். எத்தனை பாவங்கள் செய்திருப்பினும் தேரில் வரும் முருகனை முழுமையாகக் கண்டால் பாவங்கள் மாய்ந்துவிடும். நல்ல சிந்தனைத் தெளிவு ஏற்படும். தர்ம சிந்தனை தழைத்தோங்கும்.

முருகனின் முகங்கள் ஆறினையும் பார்த்த பின்னர் அதற்கு அப்பால் நகர முடிவதில்லை. முழுமதியாக அமையும் ஆறுமுகங்களினதும் அருள் பார்வை நம்மை அந்த இடத்திலேயே நிற்க வைத்துவிடும். பின்னர் எப்படி மலரடி காணமுடியும்?

முருகனின் முகங்கள் ஆறும் சித்திரங்கள் பார்ப்பவை போல முருகனின் திருமுகங்கள் வரிசையாக அமைந்தவை அன்று. சத்தியோ ஜாதம் முதலிய ஆறு திசைகளைப் பார்த்த முகங்கள் அவை. ஆறு திசைகளைப் பார்த்த முகங்களை இருதிசை அளவுகளே கொண்ட (Two dimensional) ஓவியங்களில் தீட்டமுடியுமா? இது பற்றியே "எழுதரிய ஆறுமுகம்" என்பர் அருணகிரியார்.

இம்முகங்களின் பார்வைப் பகுதிகளை நாம் சற்றுக் கற்பனை செய்து பார்க்க வேண்டும். ஆறு திக்குகளை நோக்கிய பார்வைப் பகுதி ஒரு கோள வடிவில் அமைந் திருப்பதை நாம் அறிந்து கொள்ள முடியும். இக் கோள வடிவில் அமைந்த முருகனின் திருவருள் பார்வையே முழுமதியன்ன ஒப்புவமை கூறப்படுகிறது. இந்த நிலவு ஒளியைத் தான் நக் கீரர் "ஒவற இமைக்கும் ஒளி" என்றார்.

நம்முடைய பிறவி இருள் நீக்கும் முருகனின் ஒளிப்பார்வையைக் கண்டு மகிழ்வதுடன் மட்டும் நின்று விடாமல், நமது சிந்தனை செயல்கள் தன்னலமற்றதாகவும், பொது நலன் நோக்கியதாகவும் அமைய வேண்டும். வெறுமனே 'அரோ கரா' கோஷம் இடுவது மட்டும் பக்தியல்ல. அலங்காரக் கநதனை மனதில் இருத்தி நாமும் வாழ வேண்டும். மற்றவர்களும் இனிது வாழவேண்டும் தேசம் நலன்பெற வேண்டும். அமைதி, சாந்தம், நல்லிணக்கம் ஏற்பட வேண்டும். இளைஞர்கள் பண்பாடுகாத்துப் பயனடைய வேண்டும். கல்வியிலும் பொருளாதாரத்திலும் நம் தேசம் உயரவேண்டும். இப்படியாக நமது பிரார்த்தனை அமைய வேண்டும்.

முருகன், ஆட்டையும் மயிலையும் யானையையும வாகனமாகக் கொண்டவன். கொடியிலே வேலைக் கொண்டவன் வள்ளி தேவயானை சமேதராக தேர் ஏறிவரும் திருக்காட்சி தினத்தில் அனைவரும் ஒருமுகமாக வேண்டும். வேண்டுதல் நிச்சயம் நிறைவேறும். உங்களோடு ஒருவனாக அடியேனும் அனைவருக்குமாக பிரார்த்திக்கிறேன்.

**சொல்லின் செல்வர்**
**இரா.செல்வவடிவேல்**





# நல்லூர் கந்தன் தேர்த்திருவிழா சிறப்புமலர் -2014

## அருளாசிச் செய்தி



கலியுகத்தில் கண்கண்ட தெய்வமான முருகப் பெருமான் தம்மை வழிபடும் அடியாாகளின் துன்ப துயரங்களைப் போக்கும் நோக்கில் எழுந்தருளி வீற்றிருந்து அருள் பாலிக்கும் இடம் நல்லூர் இந்த நல்லூர் கந்தசுவாமி கோயிலில் இன்று தேர்த்திருவிழா தொல்லை வினை தீர்த்திடும் நல்லைக்கந்தன் இன்று அழகிய தேரிலே ஆரோகணிக்கின்றான்.

அழகன் முருகன் இன்று அலங்காரக் கந்தனாக தனது அருட்சக்திகளான வள்ளி தெய்வானையுடன் சித்திரத் தேரிலே சிங்காரப்பவனி வருகின்றான். இந்த நல்லூரிலே ஷண்முகப் பெருமான் தேரேறி உலா வருகின்ற அற்புதக்காட்சி ஆனந்த கோலாகலக் காட்சியாகும்.

இன்றைய தேர்த்திருவிழா நன்னாளில் முருகன் அடியார்கள் அனைவருக்கும் அவனது திருவருள் கிடைக்கவேண்டுமென்று அருளாசி நல்கி வாழ்த்தி மகிழ்கின்றோம். இன்று எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டுமென்று முருகன் திருவடி பணிந்து நல்லைக் கருமணிகளையும் வணங்கி உளமாரப்பிரார்த்தித்து ஆசி வழங்கி வாழ்த்துகின்றோம். எல்லாம் வல்ல நல்லைக்கந்தனின் நல்லருள் எல்லோருக்கும் கிடைக்கவேண்டுமென்று வணங்கி நிற்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

ஆதீனகுருமுதல்வர்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான
சம்பந்த பரமாசார்ய சுவாமிகள்
நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம்.

## நல்லூர் முருகனே நல்லருள்தர வருக!




தொல்லை வினை தீர்க்கும் நல்லைக் கந்தனுக்கு இன்று தேர்த் திருவிழா அடியார்க் கருளும் பெருமானாக ஆறு முகங்களோடு ஆனந்த கோலாகலத்துடன் அழகிய சித்திரத் தேரிலே முருகன் ஆரோகணிக்கும் அழகே தனி.

இன்று நல்லூரிலே நடைபெறுகின்ற தேர்த்திருவிழாவுக்கு வரும் அடியார்கள் வேண்டுவனவற்றையெல்லாம் ஈந்தருளும் கந்தன் தனது அருட்சக்திகளான வள்ளி தெய்வானையுடன் தேரேறி வருகின்றான். அனைவரும் ஆனந்த வாழ்வு வாழ நல்லூர் முருகனின் திருவருள் பரவவேண்டுமென்றும் வாழ்த்தி வணங்குகின்றோம்.

எல்லாம் வல்ல முருகப் பெருமானுடைய அருட்பெருங் கருணையினால் எல்லா அடியவர்களும் சீரோடும் சிறப்போடும் வாழ அவனருளையே நாடி நிற்போமாக.

தெய்வத்தமிழ்ச்சுடர்
இராசையா ஸ்ரீதரன்
நல்லை ஆதீன
சமயப்பிரசாரகர்.

## வினை தீர்க்க வாராயோ முருகா!




ஆலயங்களில் நித்திய பூசைகளில நிகழவேண்டிய மந்திரவோம், கிரியாலோபம் முதலியன சரியான நேரம் நிகழாது காலம் கடந்து நடைபெறுவதினால் ஏற்படும் குறைகளை நிவர்த்தி செய்வது நைமித்தியக் கிரியைகளாகும். நைமித்தியக் கிரியைகளில் சிறந்தது மஹோற்சவக் கிரியையாகும்.

சீராரும் நல்லூரில் தேரடியிலேயிருந்து ஆரறிவரென்று சொன்ன அப்பனே கண்வளராய ஞானியர்கள், சித்தர்கள், கைமேல் கண்ட உண்மையை நாமறிந்து ஒழுகுவோமாக என்று நல்லாசி கூறுவது நல்லூர்க் கந்தன் கருணையேயாகும்.

'மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்'

சைவப்புலவர் சிவஸ்ரீ குமாரசுவாமி
சுழுகலிங்கம் M.A, J.P
இந்து தர்மாசிரியர்
சைவசித்தாந்த பண்டிதர்

## நல்லதோர் தீர்வுக்கு நல்லைக்கந்தன் வழிகாட்ட வேண்டும்



ஈழமணித் திருநாடெங்கும் கலியுகவரதனாக விளங்கும் கந்தப்பெருமானது அருளாட்சி நடைபெற்று வரும் நல்லூரில் ஆறுமுகப் பெருமான் இன்று இலட்சோப இலட்சம் மக்கள் மத்தியில் தேரேறி வருகின்ற அற்புதமான திருக்காட்சி நடைபெறுகிறது.

தேரேறி அருள்பாலிக்கும் பெருமான் அனைவருக்கும் நல்லதொரு தீர்வினைத் தந்து எல்லோரும் மண்ணில் நல்லவண்ணம் வாழ அருள்பாலிக்க வேண்டுமென அனைவரும் பிரார்த்திப்போமாக.

வர்ணனைக் கலாநிதி மதுரகவி காரை. எம்.பி.
அருளானந்தம்
J.P பணிப்பாளர், சைவத் தமிழ் பண்பாட்டுக்கழகம்,
வானொலி, தொலைக்காட்சி வர்ணனையாளர்.




# நல்லூர் கந்தன் தேர்த்திருவிழா சிறப்புமலர் -2014


தேரில் ஆரோகணிக்கும் முருகா! மக்கள் அனைவரும் மகிழ்வுடன் வாழ வரமருள்வாயே

காலத்தை வெல்லும்
கலை நுட்பத்துடன்
மின்னும் பொன் நகையால்
மேலும் ஒளிரும்
உங்கள் புன்னகை

மின்னும்
பொன் நகை
மிஞ்சும் புன்னகை

(C/3761)


புதிய கட்டடத்தில்
யாழ் மண்ணில் தனக்கே உரித்தான
தன்னிகரில்லா தலைமை நிறுவனம்

N. Kajanthan
New Maithily
JEWELLERS

NO. 38,40, KASTHURIYAR ROAD, JAFFNA.
Tel: 021 221 7878 Fax: 021 221 7877
E-mail: newmaithily@gmail.com

ந.கஜந்தன்
நியூ மைதிலி
ஜுவலர்ஸ்


## அலங்கார கந்தனுக்கு அரோகரா



அலங்காரக் கந்தனுக்கு அரோகரா
ஆறுமுகப் பெருமானுக்கு அரோகரா
குலங்காக்கும் குமரனுக்கு அரோகரா
குஞ்சரியர் நாதனுக்கு அரோகரா
நலங்காக்கும் வேலனுக்கு அரோகரா
நல்லைநகர் அப்பனுக்கு அரோகரா
நிலம் காக்கும் கந்தனுக்கு அரோகரா
நீள நினைந்தடி முருகனுக்கு அரோகரா.

அருள் - தமிழ்ச்செல்வி


தேரில் வரும் முருகா தேடிவந்தோரின் குறைநீக்கும் ஐயா
இராஜபுரம்
இராஜேஸ்வரி ரெக்ஸ்ரைல்ஸ்
RAJASWARIE TEXTILE
Dealers in
All kind of silk sarees and
sudithar

No.105,
Power House Rd,
Jaffna.
Tel. 021 222 6953

இல. 105,
மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 6953.



தேரடியில் திருப்புகழ் பாடுகிறோம் முருகன் சேவடியை தினம் நாடுகிறோம்

முத்தையா பேக்கரி

T.P:0779049691
0771310841
0778741968

சுகாதார முறைப்படி
சுவையாகத் தயாரிக்கப்பட்ட
பேக்கரி உணவுப் பொருட்கள்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்...

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.



விசேட
சலுகை...

SCS

ஷெடோனி
கூரியர் சேர்விஸ்
வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை

தேரினிலே நீயமர்ந்து வீதி வலம் வருகையிலே
தேடிவந்தோர் வினை தீருமையா!

யாழ்.மண்ணிலிருந்து வெளிநாடுகளில் உள்ள உங்கள் உறவுகளுக்கு
பொதிகளை மிக விரைவாகவும் மிகக் குறைந்த கட்டணத்திலும்
அனுப்புவதற்கு நீங்கள் நம்பிக்கையுடன் நாடவேண்டிய
இடம் ஷெடோனி கூரியர் சேர்விஸ்.

லண்டன். கனடா. ஜேர்மன். சுவிஸ். பிரான்ஸ். அமெரிக்கா.
அவுஸ்ரேலியா. சிங்கப்பூர். நோர்வே. இந்தியா மற்றும்
மலேசியா போன்ற நாடுகளுக்கு மிகக் குறைந்த கட்டணங்கள்....

உங்கள் வெளிநாட்டுப் பயணத்திற்குத் தேவையான விமானப் பயணச்
சீட்டுக்களையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

10Kg கூடிய பொதிகளுக்கு விசேட விலைக்கழிவு
(லண்டன். ஜேர்மன் | கிலோ 700 ரூபா மட்டுமே)

25Kg கூடிய பொதிகளுக்கு அதிவிசேட
விலைக்கழிவுடன் பரிசுப் பொதிகளும்
(நிபந்தனைகளுக்கு உட்பட்டது)

SHADONI
COURIER SERVICE
Worldwide Courier Service

272, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்
021 222 8591 077 266 6429
E.Mail: shadoni.scs@gmail.com

பிரதான கிளை : 7/G, மத்திய கிழக்கு வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.
021 222 1263

SKYNET WORLDWIDE EXPRESS
DHL
aramex
delivery unlimited

(C/3786)

# நல்லூர் கந்தன் தேர்த்திருவிழா சிறப்புமலர் -2014

செயல் வீரனே எம் முன் வினை போக்கிட தேரேறி வா...

## பிள்ளையார் இன் உணவகம்

வேண்டியவர்கள் தொலைபேசி மூலம்
ஒடர் பண்ணினால் எமது நிறுவன
ஊழியர்கள் தாங்களே நேரில் வந்து
கொடுப்பார்கள்.

## Pillaiyar Inn Tourist Hotel & Restauraint

Tel No. 0094 21 222 2829
Fax: 0094 21 222 4449

Email: pillaiyar.in@gmail.com
web : www.pillaiyarinn.com

பிள்ளையார் இன்
உணவகம் மூலம்
சாப்பாட்டுப் பார்சல்கள்
உங்கள்
வேலைத்தளங்களிலேயே
கொண்டுவந்து
கொடுக்கப்படும்.

சைனீஸ், இந்தியன்
(Chinrse, Indian) (C/3772)

ஒரு காய்கறி பார்சல் விலை ரூ 150/-
அசைவ உணவும் இங்கே கிடைக்கும்

(C/3770)

## Mangala SHOW ROOM

536, K.K.S.Road,
(Manokara Junction)
Jaffna.
T.P:0212228367,
0777286069



வீடு, அலுவலக மரத் தளபாடங்கள்,
பிளாஸ்ரிக், உருக்குத் தளபாடங்கள்,
மூங்கில் தளபாடங்கள், வெளிநாட்டுத் தளபாடங்கள்
வீடு, அலுவலகங்களுக்குரிய கேட்டின் வகைகள்
அனைத்தையும் ஒரே கூரையின் கீழ் பெற்றிட என்றும் மங்களா காட்சியறை
தரம்! மலிவு! அமோக தெரிவுக்கு!

## மங்களா காட்சியறை

Nilkamal DAMRO Piyestra ARPICO FURNITURE HARASARA NIPPONS PhoEnix The name for plasric EVERO

நவீன அழகிய தங்க
ஆபரணங்களுக்கு
சிறந்த ஸ்தாபனம்

## வீ.எம்.கே. ஜுவல்லறி



T.P:021 222 2515
021 7201117, 0777849369

80/8 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(C/3763)

தேரேறி வரும் முருகா! அருள் புரிவாய் நாயகனே!

20 வருடங்களுக்கு மேல் பொதிகள் சேவையில்
முன்னிலையில் திகழ்ந்து நேரடி முகவராக
தனி இடம் பிடித்துள்ள எமது நிறுவனம்

220 இற்கு மேற்பட்ட நாடுகளுக்கு மிகக் குறைந்த
கட்டணத்தில் கடிதங்கள், பொதிகள் மிக விரைவில் அனுப்பிட

## திருமுருகன் கொம் நெற்

3 தொடக்கம் 5 நாட்களில் உரிய முகவரியில் ஒப்படைக்கப்படும்.
கடல் உணவு, உணவுப் பண்டங்கள் அனுப்பி வைக்கலாம்.
உங்கள் இல்லங்களில் வந்து பொருட்களை பொறுப்பேற்று உரிய முகவரியில்
பொருட்களை ஒப்படைக்கும் வசதி.
அங்கீகரிக்கப்பட்ட முன்னணி பொதிகள்
சேவை நிறுவனத்தின் ஊடான சேவைகள்



Hotline: 0777554528
T.P: 0212227835

கிளை : 271 A கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்
இல.46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
இல.30, கனகபுரம் வீதி, கிளிநொச்சி.
இல. 18, பிரதான வீதி, நெல்லியடி.

(C/3767)

# கொழும்புக்கு விரோதமாக டில்லி ஒரு போதும் செயற்படாது

## அசையாத நம்பிக்கையில் வாசு

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் டில்லியுடன் ஆலோசனை செய்வதில் எந்தவிதமான தவறும் கிடையாது. மாறாக இந்தியாவுடன நேரடியாகப் பேசமுனைந்திருப்பது அரசாங்கத்தை இரண்டாம் தரத்திற்கு உள்ளாக்குவதுடன் பின்கதவால் செல்லும் செயற்பாடானது எனக்குறிப்பிட்டுள்ள தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார இலங்கைக்கு எதிரான டில்லி ஒருபோதும் செயற்படாது என நம்பிக்கை வெளியிட்டார்.

அதேவேளை அண்மையில் நாடாளுமன்றத்தில் விசேட உரையாற்றியிருந்த பேராசிரியர் ரொஹான் குணரட்ன வெளியிட்ட கருத்துக்கள் நல்லிணக்கத்தை நோக்கி பயணித்துக்கொண்டிருக்கும் நாட்டிற்கு அசிட் போன்றவை என அமைச்சர் கடுமையான விசனத்தை வெளியிட்டதுடன் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை நாடாளுமன்றத்திற்கு அனுமதிக்க முடியாது என்றால் மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) எவ்வாறு அனுமதிக்கமுடியும் என்றும் கேள்வியெழுப்பினார்.

தேசிய மொழிகள் மற்றும் நல்லிணக்க அமைச்சின பிரதியமைச்சர் பி.திகாம்பரத்தின் அறிமுக நிகழ்வின் பின் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் இந்திய விஜயம் மற்றும் நாடாளுமன்றத்தில் பயங்கரவாத ஒழிப்பு தொடர்பான சர்வதேச நிபுணத்துவ பேராசிரியர் ரொஹான் குணரட்ன வெளியிட்ட கருத்துக்கள் தொடர்பில் வினவியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

இனப்பிரச்சினைக்கான தேசிய தீர்வு மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு முதலில் அரசாங்கத்தரப்புடனேயே பேசியிருக்கவேண்டும். அவ்வாறு பேசப்படும்போது அரசாங்கம் கூட்டமைப்பு சில விடயங்களை ஏற்றுக்கொள்ளாத நிலைமைகள் ஏற்படலாம். அவ்வாறான நிலைமையின் போது இருதரப்பு பிரதிநிதிகள் புதுடில்லி சென்றோ அல்லது அவர்களை இங்குவர வழைத்தோ கலந்தாராய மேற்கொள்ளமுடியும். அதன் மூலம் அதிகளவிலான விடை காணமுடியாத விடயங்களுக்கு தீர்வுகளையும் ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ள முடியும் என்றார்.

## கல்நெஞ்சம் தேர்க்காலில் உருகட்டும்



புல்லரிக்க கந்தன்தேர் புவிமீது பரவட்டும்
கல்நெஞ்சம் தேர்க்காலில் அழபட்டு உருகட்டும்
வெல்லும் வாழ்வுபெற வேலெம்முள் பாயட்டும்
சொல்லுக்குச் சொல்முருக நாமமதே முழங்கட்டும்!
மெல்லெனவே கந்தன்தேர் மேதினியை வலம் வரட்டும்
செல்லுமிடம் எல்லாமே அருட்செல்வம் குவியட்டும்
பொல்லாப்பு எல்லாமே பொசுங்கியதில் போகட்டும்
செல்வாக்கும் சிவப்பேறும் எல்லோற்கும் சேரட்டும்.

ஆசுகவி
செ.சிவசுப்பிரமணியம்
மூளாய்.

மயில்வாகனனின் தேர்வலம் கண்டு பழவினை போக்கிடுவோம்!
RVG மருந்தகம்
ஆங்கில மருந்துவகைகள்
ஊட்டச்சத்துக்கள், பால்மா வகைகள்
அனைத்தையும் நியாயமான விலையில்
பெற்றுக்கொள்ளலாம்
504, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்
0212222129
RVG
ஸ்தாபனம்
58, நல்லூர் குறுக்குத் தெரு
நல்லூர்
0212226806

நல்லூர்க்கந்தன் தேர் ஏறி அருள்பாலிக்க வாரீர்...
ESP
இ.எஸ்.பி. நாகரத்தினம்
E.S.P. NAGARATNAM & CO
போத்தலில் அடைக்கப்பட்ட
குடிநீர் எம்மிடம்
பெற்றுக்கொள்ளலாம்.
Premium American
இல. 52, 54, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(C/3769)
தொ.இல:- 021 222 3096 - 021 222 7282

வல்வினை போக்கிடவே கந்தனின்
தேர்வடம் பிடித்திடுவோம்!
டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்
அங்கீகாரம் பெற்ற முகவர்
BAJAJ
சந்நிதி முருகன்
வேக் சொப் அன் சேவிஸ்
பஜாஜ் தரமான உதிரிப்பாகம் (பாட்ஸ்)
2W/3W/MRF டயர் விற்பனை முகவர்
241, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(வீரமாகாளி அம்மன் கோவில் அருகாமை)
021 222 8076, 077 711 0199, 077 201 8275
(C/3771)

தங்கரதமேறி வேல்முருகா எங்கள் குறை தீருமையா...
சுந்தர்சன்
நிறுவனத்தின்
அனைத்துப் பொருட்களும்
உத்தரவாதத்துடன்
பெற்றுக் கொள்ளலாம்.
Double/single Door Fridge
washing machine
LCD,LED,CRT TVs
Water Filttle
Electric Keter
Toasters
Rice Cooker With Steamer
Iron Box
Table fan
Pedestal Fan
Rechargeable Torch
Blenders
Electric Oven
Gas Cooker
Induction Cooker
Non Stick Pans
Home Theater System
Bulds
Chandeliers
Wall Lamps
Emersion Heaters
Table Lamps
Egg Beaters
Switches
Mobile Phones
Wusley,Pearl Rich CFL Bulbs
DVD Players
Plastic Buckets & Basins
(C/3767)
யாழ் வீதி,
மானிப்பாய்.

# செயற்திறன் குன்றிய மாகாண அரசு செயலக கூட்டத்தில் கிளம்பியது கண்டனம்

## எதிர்க்கட்சித்தலைவர் சாட்டை



(யாழ்ப்பாணம்)

செயற்றிறனற்ற வடக்கு மாகாண சபையானது ஒதுக்கப்பட்ட மூலதனநிதியில் 30 வீதத்தைக் கூட கடந்த யூலை மாத இறுதிக்குள் பயன்படுத்தத் தெரியாதிருப்பதாக ஈ.பி.டி.பியின் வடக்கு மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் தவராசா தெரிவித்தார்.

வாழ்வின் எழுச்சித் திட்டம் பற்றி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் ஒரு தொகுதியினருக்கு அறிவு றுத்தும் கூட்டம் நேற்றுமுன்தினம் யாழ்மாவட்ட செயலகத்தில் மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் தலைமையில் நடைபெற்ற போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் ஏனைய மாவட்டங்களில் சமுர்த்தி திட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்தநிலையில் வடக்கைப் பொறுத்தவரையில் வவுனியாவில் சிறுபகுதியிலும் மன்னாரில் ஒருபகுதியிலுமே முதலில் அமுல்படுத்தப்பட்டிருந்தது. இந்நிலையில் அப்போதைய ஜனாதிபதி சந்திரிக்காவுடனும் சமுர்த்தி அமைச்சராக இருந்த எஸ்.பி.திசாநாயக்கவுடன் தொடர்ந்து கலந்துரையாடியே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பெரும் போராட்டம் நடத்தியே இத்திட்டத்தை யாழ்ப்பாணத்துக் குக் கொண்டு வந்தார்.

அப்போதைய அரசு ஒரேயொரு நாடாளுமன்ற உறுப்பினரையே எதிர்க்கட்சியை விட அதிகமாகக் கொண்டிருந்தது. அச் சந்தர்ப்பத்தில் ஈ.பி.டி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 9 பேரின் பலமும் அரசுக்கு இருந்ததால், அப்பலத்தை பிரயோகித்தே அமைச்சர் இத்திட்டத்தை இங்கு கொண்டு வந்தார் என்பதை எவரும் மறந்து விடமாட்டார்கள்.

இப்போது இத் திட்டத்தை இங்கு நடைமுறைப்படுத்துவதற்கான சிந்தனையே அப்போதைய அரசுக்கு இருக்கவில்லை இன்று இத்திட்டத்தின் மூலம் சுமார் 2 இலட்சத்துக்கும் அதிகமானோர் பயன்பெறுவதுடன் பலர் தொழில் வாய்ப்புக்களையும் பெற்றுள்ளனர்.

இந்தநிலையில் வாழ்வின் எழுச்சித்திட்டம் கொண்டு வரும்போது இது 13 ஆவது சீர் திருத்தத்தை மீறும் செயலாகுமென்றும், மாகாண சபைக்குரிய அதிகாரங்களைப் பறிக்கும் திட்டம் என்றும் கூறிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். அனைத்து மாகாணங்களிலும் இத்திட்டம் அங்கீகரிக்கப்பட வேண்டும். அல்லது நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெற வேண்டும் என மேல்நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

அப்போது வடக்கு மாகாணத்திலே மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட மாகாண சபை இருக்கவில்லை. ஆளுநருக்கு தலையிட இதில் அதிகாரமில்லை. இந்நிலையில் நாடாளுமன்றத்திலே இத்திட்டம் அங்கீகரிக்கப்பட்டது. அரசு நினைத்திருந்தால் இத்திட்டத்தை இம் மாகாணத்தில் அமுல்படுத்தாமல் இருந்திருக்கலாம். எனினும் எமது அமைச்சரின் இணக்க அரசியல் காரணமாகவே இத்திட்டம் இன்று இங்கு அமுல்படுத்தப்பட்டு வருகிறது.

இதுதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசியல் எல்லாவற்றிலும் பொய்த்தனமான அரசியல் நடத்துகின்றார்களே தவிர மக்களின் நலன்சார்ந்து எதையுமே செய்வதில்லை.

இங்கு நிலவிய வறட்சி நிலை தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எப்போதிருந்தோ அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வரும் நிலையில் அவர்கள் இன்றுதான் வறட்சி தொடர்பில் குழு அமைப்பது பற்றி திட்டம் கொண்டு வருகிறார்கள்.

மாகாண சபைக்குரிய அதிகாரங்களைக் கூட பயன்படுத்தத் தெரியாமல் இருக்கிறார்கள். இதனை எமது மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். இணக்க அரசியல் மூலமே எமது அமைச்சர் உங்களுக்கான வாழ்வாதாரத்தையும் பெற்றுத் தந்துள்ளார் என்பதையும் நீங்கள் மறந்து விடக் கூடாது. என்றும் அவர் தெரிவித்தமை குறிப்பிடத்தககது.

## முரசின் இன்றைய பலன்

(24.08.2014 ஞாயிற்றுக்கிழமை)



ஜய வருஷம் ஆவணி மாதம் 08 ஆம் திகதி.
சதுர்த்தசி திதி / மரணயோகம்.
ஆயிலிய நட்சத்திரம் பி.இ. 04.41 வரை. பின் மகம் முழுவதும்.
இராகு காலம் 04.35 - 06.05 வரை. சுபநேரம் 09.05 - 10.35 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | பரீட்சைப் பெறுபேறு சாதகமாக அமைந்ததினால் அதிகார பூர்வமான பதவி கிட்டும் சந்தர்ப்பம் ஏற்படல், உணவுக் கட்டுப்பாட்டினை பிசகாமல் அனுட்டித்ததால் நீரிழிவு நோயின் தாண்டவம் குறைவடைதல். |
| ரிஷபம் | விவாக விடயத்தில் அவசரப்பட்டு முடிவெடுத்தது தவறு என்பதை உணர்ந்து கவலைப்படல், நிலுவையின் ஒரு பகுதியாவது தொலைபேசி பேச்சுவார்த்தை மூலம் கிட்டியதால் ஆனந்தம். |
| மிதுனம் | கௌரவக்குறைவாக நடாத்த முற்பட்டதால் அழைப்பிதழை ஏற்கமறுத்து சமூகமளிக்காது விடல், அவசரக் குடுக்கையினால் பணத்தைச்சரியாகக் கணக்கிடாது பெற்று அவதிப்படல். |
| கடகம் | கண்மூடித்தனமாக அவசரப்பட்டு காரியத்தில் ஈடுபடாது சிந்தித்து செயற்படல் நன்றாகும், அயலவர்களுடன் ஏற்பட்டிருந்த பகைமை உணர்வு விட்டுக்கொடுப்பினால் நீங்கி விடல். |
| சிம்மம் | களத்திரத்தின் நோய் குணமடையாது தொடர்ந்து கண்டு பதகளிப்பேற்படல், பேதம் காரணமாக விவாகத்திற்கு இசைபட மறுத்து மனச்சான்று உறுத்தியதினால் சம்மதம் தெரிவித்தல். |
| கன்னி | பெற்றோரின் துயரை நினைத்து சகபாடிகளைக் கைவிட்டு கல்விப்புலத்தில் முழுக்கவனத்தையும் செலுத்த முஸ்தீபு, நிலுவை அதிகரித்ததால் தற்காலிகமாக தொலைபேசி பாவனை துண்டிக்கப்படல். |
| துலாம் | சம்பளப்பற்றாக்குறையினால் வேலையைக்கைவிட்டு தாயகம் திரும்ப எண்ணமிடல், கௌரவப்பதவி கிட்டுவதற்கு பிரமுகர் சிபார்சு செய்தல். |
| விருச்சிகம் | அனுபவ சாலிகளின் புத்திமதியைச் செவிமடுத்ததால் நாட்டின் எல்லையை சுலபமாக கடந்து விடல், போலி நகைகளை அணிந்து சென்றதால் திருட்டு நபர்களின் 'பாச்சா' பலிக்காது விடல். |
| தனுசு | தம்பதியருக்கிடையே ஏற்படும் மோதலைத்தவிர்க்க பிள்ளைகள் மத்தியஸ்த்தர்களாகச் செயற்படல், நீண்டநாட்களாக இழுபட்டுக்கொண்டிருந்த நிலுவை வந்தடைதல். |
| மகரம் | எதிர்கொண்ட சவால்களை சாதுரியமான முறையில் அணுகிவெற்றியை அடைதல், தேகநலம் அடிக்கடி பாதிப்படைவதினால் பணியினின்றும் ஒய்வுபெற எண்ணமிடல். |
| கும்பம் | நிலுவை அதிகரித்து செலுத்த முடியாத நிலையில் மின் இணைப்புத்துண்டிக்கப்படல், வாகனத்தை நிற்பாட்ட முன் ஏறமுயன்றதினால் சிறுவிபத்து தக்க வைத்தல். |
| மீனம் | பெற்றோரின் புத்திமதிகளை அலட்சியஞ் செய்த பிள்ளைகளின் செயற்பாட்டை எண்ணி வருந்துதல், பரீட்சை முடிவு சாதகமாக இருந்தமையினால் பதவி ஏற்றத்துடன் சம்பள அதிகரிப்பும் மகிழ்வூட்டல். |

## சூடுபிடிக்கிறது ஊவா தேர்தல் களம் வன்முறைகளும் தாராளம்

ஊவா மாகாண சபை தேர்தல் தொடர்பில் இதுவரை 51 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக தேர்தல்கள் செயலகம் அறிவித்துள்ளது. மொனராகலை மாவட்டத்தில் 31 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக தேர்தல்கள் செயலகத்தின் முறைப்பாட்டு பணியகம் தெரிவித்துள்ளது. பதுளை மாவட்டத்திலிருந்து 15 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் முறைப்பாட்டு பணியகம் குறிப்பிட்டுள்ளது.

மேலும்,தேர்தல் பிரசார பதாகைகளைக் காட்சிப் படுத்துதல், கட்டவுட் மற்றும் பனர்களை காட்சிப்படுத்துதல் போன்றவை தொடர்பிலே அதிகமான முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. இவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் 19 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தேர்தல்கள் செயலகத்தின் முறைப்பாட்டு பணியகம் சுட்டிக்காட்டியுள்ளது.

## பௌத்தத்தை பாதுகாக்க அரசு என்றும் தவறாது

### பிரதமர் கூறுகிறார்

(கொழும்பு)

பௌத்த மதத்தைப்பாது காக்க அரசு ஒருபோதும் தவறாது என்றும் பௌத்த மதத்தை பாதுகாக்கவில்லை என்ற குற்றச்சாட்டில் உண்மையில்லை என பிரதமர் டி.எம்.ஜயரட்ன தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் பௌத்த மதத்தை பாதுகாக்கத் தவறியுள்ளதாக சில தரப்பினர் குற்றம் சுமத்தி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். சில தரப்பினர் மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் முரண்பாடுகளை வெடிக்கச் செய்யும் நோக்கில் இவ்வாறான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருவதாகத் தெரிவித்துள்ளார்.

மஹாவ இபலோகம பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் பெரும் எண்ணிக்கையிலான் கிராம பகுதிகளைச் சேர்ந்த பௌத்த விஹாரைகள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

## வர்த்தகர்களின் பிரச்சினை தீர்வுக்கு ஏற்பாடு

யாழ்ப்பாணத்தில் நுகர்வுப் பொருட்களை விநியோகிக்கும் அல்லது சந்தைப்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ள வர்த்தக நிறுவனங்கள் இப்போது பல பிரச்சினைகளை எதிர்நோக்குவதான முறைப்பாடுகளே அதிகமாக உள்ளன. எனவே இப்பிரச்சினைக்கு பொருத்தமான தீர்வைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு இவ்வாறான விநியோகித்தர்கள் அல்லது சந்தைப் படுத்துவோர் தொடர்பான விபரங்களையும் மற்றும் கம்பனிகளுடனான பிணக்குகள் பற்றிய விபரங்களையும் பெற்றுக் கொள்வதற்கு யாழ்.வணிகர் கழகம் தீர்மானித்துள்ளது. எனவே யாழ்.வணிகர் கழகத்திலிருந்து பெற்றுக் கொள்ளக் கூடிய படிவங்களில் மேற்படி விபரங்கள் அனைத்தையும் பதிவு செய்து வணிகர் கழகத்தில் ஒப்படைக்கும்படி வணிகர் கழகம் அனைத்து விநியோகத்தர்களையும் மற்றும் சந்தைப் படுத்துவோர்களையும் கேட்டுக் கொண்டுள்ளது.

# தேர்தல் சட்ட அமுலாக்கம் முயல் கொம்பாக மாறுகிறதா?

## ஐ.தே.கட்சி சாடல்

(கொழும்பு)

தேர்தல்கள் ஆணையாளருக்கு, தேர்தல் சட்டங்களை அமுல்படுத்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய தேசிய கட்சி குற்றம் சுமத்தியுள்ளது கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய, கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பாலித்த ரங்கே பண்டார இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்

ஊவா மாகாண சபை கலைக்கப்பட்ட பின்னர், வெல்லவாய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், தமக்கு அதிகார்முள்ளது, தேர்தல் சட்டம் அமுல்படுத்தப்படுகின்றது என தேர்தல்கள் ஆணையாளர் கூக்குரலிடுகிறார்.

தற்போது, எங்கே சென்றது தேர்தல்கள் ஆணையாளரின் தேர்தல் சட்டம்.

எனவே அவர், குரைக்கின்ற நாய் கடிக்காது என்ற நிலைமைக்கு ஆளாகியுள்ளார். இது குறித்து நாட்டு மக்கள் அனைவரும் கவலையடைவதாக நாடாளுமன்ற உறுப்பினர் பாலித்த ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஐக்கிய தேசிய கட்சி மற்றும் நல்லாட்சிக்கான தேசிய முன்னணிக்கு இடையே ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்தாகியுள்ளது.

இதுதவிர, கட்சியின் புதிய தொகுதி அமைப்பாளர்கள் ஐந்து பேருக்கான நியமனக்கடிதங்களும் எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்கவினால் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## விதிகளை மீறும் அதிகாரிகள் ஜே.வி.பி.போர்க்கொடி

அரசாங்கம் கடுமையான தேர்தல் சட்ட மீறல்களில் ஈடுபட்டு வருவதாக ஜே.வி.பி குற்றம் சுமத்தியுள்ளது. ஊவா மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடும் அரசாங்கம் பல்வேறு தேர்தல் முறைகேடுகளில் ஈடுபட்டுள்ளதாக ஜே.வி.பி.யின் பொதுச செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

அரசாங்க அதிகாரிகளை தேர்தல் பிரசாரத்திற்காக ஆளும் கட்சி பயன்படுத்திக் கொண்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். சமுர்த்தி அதிகாரிகளும், புதிதாக நியமிக்கப்பட்ட அரசாங்க அதிகாரிகளும் பிரசாரப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

அடைப்புக்குள் இருக்கும் பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்து பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.

| | | | | |
|---|---|---|---|---|
| பள்ளிவாசல் | நாம்புவ | தைனமோ | மடி | காக்கும்பலகை |
| பத்திரிப்பு | பாதட்டிய | மின்சுருள் | மின்உயர்த்தி | மஸ்ஜித் |

37. உயரமான கட்டடத்தின் மேல்மாடிக்கு இலகுவாகச் செல்லப் பயன்படுத்தப்படும் சாதனம் எது?

..................................................

38. சைக்கிள் விளக்குக்கு மின்சக்தியை வழங்கும் உபகரணம் எது?

..................................................

39. வலையில் அகப்படும் மீன்கள் சேரும் மூலையின் பெயர் எது?

..................................................

40. இஸ்லாம் மார்க்கத்தினரின் சமய வழிபாட்டிடத்தின் பெயர் யாது?

..................................................

41. அகழ்வுக் கைத்தொழில் மாணிக்கக்கல் தாதுக்கள் கொண்ட கூடையின் பெயர் யாது?

..................................................

| | | | |
|---|---|---|---|
| கத்தரிக்கோல் | கைவில்லை | ஊக்குவெட்டி | கவர்ச்சத்தியல் |
| அரம் | தீதாள் | கைத்தாளம் | உடுக்கு |

42. சிறு பொருள்களைப் பெருப்பித்துப் பார்ப்பதற்குப் பயன்படுத்தப்படும் உபகரணம்?

..................................................

43. கத்தியைத் தீட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் உபகரணம்?

..................................................

44. இரும்பாணியைக் கழற்றுவதற்குப் பயன்படுத்தப்படும் உபகரணம்?

..................................................

45. தாளம் போடுவதற்குப் பயன்படுத்தப்படும் உபகரணம்?

..................................................

46. தைக்கும்போது பாதுகாப்பிற்காகப் பயன்படுத்தப்படும் உபகரணம்?

..................................................

47. A,B ஆகிய இரண்டு தட்டிலும் உள்ள மெழுகுதிரிகள் ஒரே அளவானவை. இரண்டையும் ஒரே நேரத்தில் எரியச் செய்து இரண்டும் வெவ்வேறு அளவுடைய போத்தல்களினால் ஒரே நேரத்தில் மூடப்பட்டது. இதன்போது முதலில் அணைந்த மெழுகுதிரி எது?




1. A தட்டில் உள்ள மெழுகு திரி
2. B தட்டில் உள்ள மெழுகு திரி
3. A, B ஆகிய இரண்டு தட்டிலும் உள்ள மெழுகுதிரி ஒரே நேரத்தில் அணைந்தது

48. ஒரு பெரிய காணியில் பூந்தோட்டத்திற்கு மேற்கே தென்னந்தோப்பும் தென்னந்தோப்பிற்கு தெற்கே மாந்தோட்டமும் உள்ளன. ஆகவே பூந்தோட்டத்திற்கு எத்திசையில் மாந்தோட்டம் உள்ளது.

1. தெற்கு  2. தென்மேற்கு  3. கிழக்கு

49. ராஜா, நிமல் ஆகிய இருவரினதும் நிறைகளின் கூட்டுத்தொகை 45 கிலோக்கிராம் ஆகும். நிமல், சுரேஸ், ராஜா ஆகிய மூவரினதும் நிறைகளின் கூட்டுத்தொகை 68 கிலோகிராம் ஆகும் எனின் சுரேஸின் நிறை யாது?

1. 15 கிலோகிராம்  2. 68 கிலோகிராம்  3. 23 கிலோகிராம்

50. முகவையொன்றினுள் நீர், மண்ணெண்ணெய், தேங்காயெண்ணை மூன்றையும் கலக்கி விடப்பட்டபோது மூன்றும் வெவ்வேறாகப் பிரிந்து தனித்தனி படையாகக் காணப்பட்டது. இதில் B படை யாதாக இருக்கலாம்?



1. நீர்  2. தேங்காயெண்ணெய்  3. மண்ணெண்ணெய்



# தரம் - 4 புலமைப் பரிசில் முன்னோடிப் பரீட்சை - 2014

பகுதி - I, II

# கல்வி முரசு



இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்களின் விடைகள்

**அடைப்புக்குள் உள்ள ஒருசொல் வித்தியாசமானது. அதன் கீழ்க் கீறிடுக.**

01. ஒழுக்கம் - (நடை, நன்னடத்தை, ஒழுகுகை, சீலம்)
02. ஆர்வம் - (அன்பு, விருப்பு, பற்றுள்ளம், ஆரவாரம்)
03. ஒழுகல் - (ஆசாரம், ஒழுகுதல், நடத்தல், இளகுதல்)
04. தருமம் - (அறம், தருமம், நற்செயல், நீதி)
05. காலம் - (அகாலம், பொழுது, பருவம், தக்கசமயம்)

**ஒத்த கருத்துச் சொற்களைத் தெரிந்து எழுதுங்கள்**

(நெகிழ்தல், நன்மை, செய்தல், மனம், வையகம்)

06. உலகம் ..................................................
07. உள்ளம் ..................................................
08. கசிதல் ..................................................
09. நன்றி ..................................................
10. இயற்றல் ..................................................

**பின்வரும் நிகழ்வுகள் ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான பழமொழிகளைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுங்கள்.**

11. சந்தர்ப்பம் கிடைக்கும்போது அதனைத் தக்கபடி பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.
    1. சுவரை வைத்துக்கொண்டே சித்திரம் வரைய வேண்டும்.
    2. சிறுதுரும்பும் பல்லுக்குத்த உதவும்
    3. காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்
    4. மனமுண்டானால் இடமுண்டு

12. மழைபெய்ததை மண்ணால் மூடி மறைக்க முடியாது
    1. கழுதை அறியுமா கற்பூர வாசனை
    2. உலை வாயை மூடலாம் ஊர்வாயை மூட முடியுமா
    3. உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா
    4. கோழி மிதித்துக் குஞ்சு சாகுமா

13. ஒருவர் இளமைக் காலத்திற் கற்கும் கல்வியானது அழியாது இறுதிவரை நிலைத்து நிற்கும்.
    1. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா
    2. இளமையில் கல்வி சிலையில் எழுத்து
    3. கண்டது கற்கப் பண்டிதன் ஆவான்
    4. பாடை ஏறினாலும் ஏடது கைவிடேல்

14. தோற்றத்தின் பெருமை, சிறுமையைப் பார்த்து ஒரு பொருளை மதிப்பிடக்கூடாது.
   1. சிறு துரும்பும் பல்லுக்குத்த உதவும்
   2. அச்சாணி இல்லாத தேர் முச்சாணும் ஓடாது
   3. விளையும் பயிரை முளையிலே தெரியும்
   4. ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது

15. கிரிக்கெட் விளையாட்டில் எமது வீரர் பெயர் பொறித்துள்ளனர்.
   1. பதிவு செய்துள்ளனர்
   2. புகழை நிலைநாட்டியுள்ளனர்
   3. வெற்றி பெற்றுள்ளனர்
   4. சவாலை ஏற்றுள்ளனர்

16. ஒருவர் சிறு நன்மை கருதி இழக்கும் மதிப்பினை எவ்வளவு முயன்றாலும் மீண்டும் பெறமுடியாது
   1. அணை கடந்த வெள்ளம் அழுதாலும் வராது
   2. வெள்ளம் வருமுன்னே அணைகட்ட வேண்டும்
   3. அரைக்காசுக்குப் போன மானம் ஆயிரம் பொன் கொடுத்தாலும் வராது
   4. கண்கெட்ட பிறகு சூரிய வணக்கமா


17. எனது நண்பன் குமார், கடந்த நான்கு மாதங்களாக எங்கள் வீட்டுக்கு வரவில்லை. நேற்று எதிர்பாராமல் வந்தான.
   1. காகம் இருக்கப் பனம்பழம் விழுந்தது போல்
   2. கார்த்திகைப் பிறை கண்டாற் போல
   3. காற்றிலே அகப்பட்ட துரும்பு போல
   4. நட்டாற்றில் கைவிட்டாற்போல

18. தாயார் கூறிய புத்திமதிகளைத் தமயந்தி ஒரு நொடியில் மறந்தாள்
   1. ஆனை வாயில் கரும்புபோல
   2. நீர் மேல் எழுத்துப்போல
   3. கல்மேல் எழுத்துப்போல
   4. குரங்கின் கைப்பூமாலை போல


19. போஷாக்கின்மையால் மாலா மிகவும் மெலிந்து காணப்பட்டாள்
   1. வாட்ட சாட்டமாய் இருந்தாள்
   2. ஊன் உறக்கமில்லாமல் இருந்தாள்
   3. எலும்பும் தோலுமாக இருந்தாள்
   4. கொழுத்துப் பருத்திருந்தாள்

20. தேயிலை 250 கிராமின் விலை ரூபா 48 ஆகும். 2 kg 500g கிராம் தேயிலையின் விலை யாது?

..........................................................

21. 
அருகில் தரப்பட்ட கூட்டற் பிரசினத்தில் △ இனால் ஓர் இலக்கமும் △ இனால் ஓர் இலக்கமும் காட்டப்பட்டுள்ளது எனின் △ இனாலும் □ இனாலும் குறிப்பிடப்படும் இலக்கத்தை எழுதுக.

□ .................................... △ ....................................

22. 
அருகே தரப்பட்ட முகவையான்து 7 லீற்றர் நீரைக் கொள்ளக்கூடியது. இதனை முழுமையாக நிரப்ப இன்னும் தேவையான நீரின் அளவு யாது?
   1. 7 L 800 ml
   2. 6 L 200 ml
   3. 5 L 200 ml



**பின்வரும் விவரணத்தை வாசித்துக் கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடைதருக.**

நாம் நினைப்பது ஒன்று. நடப்பது ஒன்று. எவ்வளவு ஆசைகளை மனதில் ஏற்றிவைத்த மக்களுக்கு ஏற்பட்ட கதியினை கணிப்பிட முடியாது. உலகத்தையே துன்பத்தில் ஆழ்த்திவிட்டது இந்தச் சுனாமிப் பேரலை. கணக்கிட முடியாத உயிர்களை, உடமைகளை எல்லாம் இழந்த மக்கள் யாரை நினைக்கப் போகிறார்கள். யார்தான் உதவி செய்யப் போகிறார்கள். குடும்பமே முற்றாக அழிந்தவர்கள் போனாலும் குடும்பத்தில் தனியாகத் தவிக்கும் சிறுவர்களை நினைத்தால் வேதனை வருகிறது. ஆண்டவர் இப்படிக் கணக்கை முடித்தாரோ என்பது கேள்விக் குறிதான். எனவே நாங்கள் துன்பப்பட்டவர்களுக்கு ஏலுமான உதவியைச் செய்தல் வேண்டும்.

23. மேலே கூறப்பட்ட விவரணம் எதைப் பற்றியது?

..........................................................

24. உடமைகள் என்பது எவற்றைக் குறிக்கும்?

..........................................................

25. உயிர் என்பதன் ஒத்தசொல் ஒன்று தருக

..........................................................

26. ஆசை என்பதன் எதிர்ச் சொல் ஒன்று தருக

..........................................................

26. உமது மனதில் சோகத்தை ஏற்படுத்திய ஒரு பகுதியை எழுதுக.

..........................................................

27. குடும்பம் என்பது யாரைக் குறிக்கும்?

..........................................................

29. உயர்திணை, பலர்பால், பன்மை, படர்க்கை உள்ள பெயர்ச்சொல் தருக

..........................................................

30. 'இன்பம்' என்பதன் எதிர்ப்பதம் இரண்டு உண்டு. அவற்றைக் கூறுக.

1.................................... 2....................................

31. வாழ்க்கை யாரினால் நிர்ணயிக்கப்படுகிறது எனக் கூறப்படுகின்றது?

..........................................................

32. கூடுதலாகப் பாதிக்கப்பட்ட மக்கள் எப்பகுதியை அண்டி வாழ்ந்தவர்கள் எனக் கருதப்படுகின்றனர்?

..........................................................

**பின்வரும் ஒழுங்கின்றி இருக்கும் வாக்கியங்களை ஒழுங்குபடுத்தி எழுதுக.**

33. சென்று / வீடு திரும்பினார் / கடவுளை / கோவிலுக்கு / வணங்கி

..........................................................

34. கேட்டு / சொல் / பெரியோர் / நன்று / நடத்தல்

..........................................................

**பின்வரும் கூற்றின் கருத்தை வெளிப்படுத்தும் பழமொழியை எழுதுக.**

35. ஒருவருடன் பழகும்போது அளவுடன் பழகுதல் வேண்டும்.

..........................................................

36. எந்தச் செயற்பாடாயினும் ஏனையோர் உதவியை எதிர்பாராது நாமே செய்தல் நன்று.

..........................................................

# இணக்க அரசியல் மூலமே வடக்கில் "வாழ்வின் எழுச்சி" சாத்தியமாகியது





வாழ்வின் எழுச்சித் திட்டத்தை கொண்டு வருவது தொடர்பில் எதிர்ப்பு அரசியல் நடாத்துபவர்கள் அன்று வெற்றி பெற்றிருந்தால் இன்று இத்திட்டம் நடைமுறைக்கு வந்திருக்காது என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

வாழ்வின் எழுச்சித் திட்டம் பற்றி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் ஒரு தொகுதியினருக்கு அறிவுறுத்தும் கூட்டம் யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் தலைமையில் நடைபெற்ற போது அதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாம் முன்னெடுத்து வரும் இணக்க அரசியல் காரணமாக இத்திட்டத்தை இங்கு அமுல்படுத்தினோம். அதன்பின்னர் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் அமுல்படுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டோம்.

எதிர்ப்பு அரசியல் நடாத்துபவர்கள் அன்று வெற்றி பெற்றிருந்தால் இத்திட்டம் இன்று இங்கே நிறுத்தப்பட்டிருக்கும். அதன்மூலமாக எமது மக்களது பயன்கள் அனைத்தும் நிறுத்தப்பட்டு அரசுக்கு பல கோடி ரூபா பணம் எஞ்சியிருக்கும்.

ஆனால், இந்த அரசு அப்படி நடந்து கொள்ளவில்லை. எமது அரசியல் கொள்கைக்கு இணங்கி இத்திட்டத்தை இங்கு நடைமுறைப்படுத்த முன்வந்தது. இல்லையேல் வடக்கு மாகாணத்தில் ஆயிரக்கணக்கான உத்தியோகத்தர்கள் தொழில் வாய்ப்புக்களை இழந்திருப்பார்கள் இலட்சக்கணக்கான மக்கள் தங்களது வாழ்வாதாரங்களை இழந்திருப்பார்கள்.

எனவே வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர்களான நீங்கள் மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தி அவர்களது வாழ்வு ஒளிமயமானதாக திகழ பொறுப்புடனும் அர்ப்பணிப்புடனும் செயற்பட வேண்டும்.

அதற்குரிய வேலைத்திட்டங்களையும் செயற்பாடுகளையும் முன்னெடுக்க வேண்டும்.

அதுமட்டுமல்ல "எமது பகுதிக்கு நிலையான குடிநீர் வசதியினையும் பெறுவதற்கென ஒருதிட்டம் வகுக்கப்பட்டது. வடக்கில் தொடர்ந்திருந்த காலத்திலேயே கிளிநொச்சி மாவட்ட விவசாய மக்களின் ஒப்புதல்களும் பெறப்பட்ட நிலையில் அரசு இத்திட்டத்திற்கான சர்வதேச கடனையும் பெற்றது.

ஆனால் இத் திட்டம் நிறைவேற்றப்படுவதில் சில சுயலாப அரசியல் சக்திகள் முட்டுக்கட்டை போட்ட வண்ணமுள்ளனர்.

இத்திட்டமானது இரணைமடுக்குளம் விஸ்தீரணமாகப் புனரமைக்கப்பட்டு மேலும் இரண்டு அடிகள் உயர்த்தி அதன்மூலம் கிளிநொச்சி மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் குடிநீரும், விவசாயம் உட்பட்ட ஏனைய தேவைகளுக்காக நீரும் வழங்கி எஞ்சுகின்ற நீரை குடிநீருக்காக மாத்திரம் யாழ்.மாவட்டத்திற்குக் கொண்டு வருவதாகவும் இத்திட்டத்திற்கு சில சுயநலமிகள் தடையேற்படுத்தி வருகின்றனர்.

இவ்விடயம் தொடர்பில் எமது மக்களுக்கு அறிவுறுத்தும் பொறுப்பினையும் இவ்வுத்தியோகத்தர்கள் ஏற்றுச் செயற்பட வேண்டும்.

இந்தநிலையில் எமது நிலத்தடி நீரில் சுன்னாகம் மின் உற்பத்தி நிலையங்களின் மூலம் வெளியேற்றப்படுகின்ற கழிவு ஒயில் மற்றும் கிறிஸ் கலந்திருப்பதாகவும் ஆய்வுகள் கூறுகின்றன. இதனால் குளங்களும் பாதிக்கப்பட்டுள்ளதாக தற் போதைக்கு தெரியவந்துள்ளது.

இதற்கு எமது முற்கால அரசியல் தலைமைகளே பொறுப்பு கூற வேண்டும். யாழ்ப்பாணத்தில் மின்சார சபை 1958ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அன்று முதல் கழிவுகள் கவனக்குறைவாக அப்புறப்படுத்தப்பட்டு வந்துள்ளதாகவே தெரிய வருகிறது.

இன்றைய அரசியல் தலைமைகளும் பின்னராக யுத்தம் நடாத்தியவர்களும் மக்களை உசுப்பேற்றி தங்களது அரசியலை நடாத்தினரே அன்றி எமது மக்களுக்கு நல்லதொரு எதிர்கால வாழ்க்கையை உறுதிப்படுத்த தவறிவிட்டனர்.

எனவே இவ்வாறான விடயங்கள் தொடர்பில் மக்கள் விழிப்புணர்வு பெற வழிவகுக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

## ஜனாதிபதி தேர்தலில் யாருக்கு ஆதரவு? அடுத்த மாத நடுப்பகுதியில் அறிவிப்போம்

### பொதுபலசேனா பொதுச்செயலாளர் தகவல்

ஜனாதிபதி தேர்தலில் தமது ஆதரவு யாருக்கு என்பதை செப்ரெம்பர் மாத நடுப்பகுதியில் பகிரங்கப்படுத்துவோம் என பொதுபலசேனாவின் பொது செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம கொழும்பில் 3000 பௌத்த குருமார்கள் கூடும் மகா சங்கசம்மேளனத்தை நடாத்தவுள்ளோம்.

இதில் நாடு பூராகவும் இருந்து பௌத்த குருமார்கள் கலந்து கொள்கின்றனர். இதன் போது ஜனாதிபதி தேர்தலில் யாரை ஆதரிப்பது என்பது தொடர பில் பகிரங்கமாக அறிவிக்கப்படும்.

பொது வேட்பாளர் தொடர்பில் எமக்கு அக்கறையில்லை. இலங்கையில் சிங்கள பௌத்தர்களைப்பாதுகாக்கும் தேசிய தலைமைத்துவமே எமது இலக்காகும்.

அவ்வாறான ஒருவர் ஜனாதிபதி தேர்தல் களத்தில் குதித்தால் எமது ஆதரவை அவருக்கு வழங்குவோம்.

தற்போது பொதுபல சேனாவின் வரைவிலக்கணம் தொடர்பில் திட்டம் தயார் செய்யப்படுகின்றது. செப்டெம்பர் பகிரங்கப் படுத்தப்படுமென்று ஞானசார தேரர் தெரிவித்தார் என்றார்.

## நீதிமன்ற வளாகத்தில் வாக்குவாதம் 4பேருக்கு விளக்க மறியல்

சாவகச்சேரி நீதிமன்ற வளாகத்தில் வாக்குவாதத்தில் ஈடுபட்ட நால்வரையும் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 5ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதவான் நீதமன்ற நீதவான் ஸ்ரீநிதி நந்தசேகரன், நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.

காணி வழக்குத் தொடர்பில் நீதிமன்றத்திற்கு நேற்று முன்தினம் வருகை தந்த இரு தரப்பைச் சேர்ந்த நால்வரும் நீதிமன்ற வளாகத்தில் வைத்து வாக்குவாதத்தில் ஈடுபட்டதை அடுத்து நால்வரையும் கைது செய்யும்படி பொலிஸாருக்கு நீதவான் உத்தரவிட்டார்.

அதனையடுத்து, குறித்த நால்வரையும் கைது செய்த சாவகச்சேரி பொலிஸார், நீதவான் முன்னிலையில் ஆஜர்ப்படுத்திய போதே மேற்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.



நல்லைக்கந்தனின் சப்பரத்திருவிழாவான நேற்றையதினம் அடியவர்கள் கற்பு,ரச்சட்டி, காவடி, மற்றும் தூக்குக்காவடி எடுத்து நல்லூர் நோக்கி வருவதனைக்காணலாம். (படம்: பா.பார்த்தீபன்)

## பரமர் சங்கமம்



'இழகிய இரும்பைக்கண்டால் கொல்லன்... எதையோ தூக்கித்தூக்கி அழப்பான்' எண்ட பழமொழிக்கு பொருந்தக் கூழயதாகத்தான் தமிழக மீனவர்களின் போக்கும் தெரியுது.

கடும்புழ புழக்காமல் அவையள் பதத்துக்கு வாறதாத் தெரியேல்லை. கடைசியாக் கூட தொண்ணூறுக்கும் அதிகமாக கைது செய்துவிளக்கமறியலில் வைக்கப்பட்ழருந்த இந்தியத் தமிழக மீனவர்களை விடுதலை செய்யுமாறு இலங்கை ஜனாதிபதி அதிகாரிகளுக்குப் பணிப்புரை வழங்கியிருந்தார்.

இந்தியாவுடனான நட்பை முறித்துக்கொள்ளக்கூடாதெண்ட இலங்கையின் நல்லெண்ணச் செயற்பாடுகளைத் தமிழகம் ஒரு பொருட்டாகக் கூட கருதவில்லை; எண்டதையே அவையின்ரை தொடர்ந்த அத்துமீறல்கள் சுட்ழக்காட்டுதெல்லே?

இந்திய நீதிமன்றத்தின் தீர்பை அமுல்செய்ய மத்திய அரசு தமிழக மாநில அரசுக்கு பணிக்காமல் இருந்து வருவதும் ஏதோ பேசிப்பறைஞ்சு செய்வது போலில்லையே! தமிழக மீனவர்கள் தொழிலுக்குப் போகாமல் ஹர்த்தால் அனுட்ழப்பதும், வெள்ளைக் கொழயுடன் கச்சதீவுக்கு வந்து இலங்கை அரசிடம் தஞ்சம் கோரப்போவதாகவும் பீற்றுவதெல்லாம் வேழக்கை ஆகத்தானே இருக்கு.

கிட்டழயிலை தமிழக மீனவபிரதி நிதியொருவர் சொல்லி இருந்தார் இழுவைப்படகுத் தொழிலைக் கைவிட்டு ஆழ்கடல் தொழிலுக்குப்போகப் போவதாக! அதுக்கு முன்னாய் இப்பொழுது ஈடுபட்டுவரும் தொழில்களில் மூன்றிலொரு பகுதியை உடனழயாக நிறுத்துவதற்கு சம்மதமென்றும் முற்றுமுழுதாக நிறுத்த மூண்டாண்டு காலம் தேவையெண்டும் கூறியிருந்தார்.

ஆறின கஞ்சி பழங்கஞ்சி எண்டே போலை அப்புழ இப்புழ இழுத்தழச்சுக்காலங்களைக் கடத்திறேதான் யோசினை. இந்தியக் கடலெல்லைக்குட்பட்ட பகுதிகளெல்லாம் இழுவை மழயைப்போட்டு வழிச்செடுத்து மீனினத்தை இல்லாமல் செய்து கடலிலும் புல்பூண்ழல்லாமல் செய்தவை இப்ப எங்கடை கடலேம அழிச்சுக் கொண்ழருக்கிறாங்களெண்டு வடபகுதி மீனவர்கள் பிலாக்கணம் வைக்குதுகள்.

தமிழக மீனவரைப்பார்த்து இஞ்சை துவங்கிய இழுவைப் படகுத்தொழிலை நிப்பாட்ழப்போட்ழனம். எண்டாலும் அதாலை கடல்லை கிடந்தகுஞ்சு குருமன்களை அழிச்சதாலைதான் வட பகுதி மீனவர்களின் எந்தத் தொழிலிலும் மீன்படுகுதில்லை. அப்புழயிருக்க தமிழக மீனவரின் இழுவைப்படகைக் கட்டுப்படுத்தாதது வஞ்சனையான செயலெனெ வடபகுதி மீனவர்கள் கொதிச்சுக்கொண்ழருக்கினம்.

இலங்கை அரசாங்கம் இது விசயத்தில் கடும் போக்கைக் கைக்கொள்ளாவிட்டால் ஈடாழக்கொண்ழருக்கும் வடபகுதி மீனவர்களின்வாழ்வு அதளபாதாளத்துக்குத் தள்ளப்படுமென அச்சம் தெரிவிக்கப்பட்ழருக்கு.

தொப்புள்கொழ உறவு உறவெண்டெல்லே பறியிலை கைவைக்கினம் தமிழின இந்திய மீனவர்கள் இழகிய இருப்பைக் கண்டால் தூக்கித்தூக்கி அழக்கும் கொல்லனை போல நடந்து வரும் அவையளுக்கு கொஞ்சம் இறுக்கிப்புழச்சாத்தான் சரிவரும் இல்லையே பின்னை சொல்லுங்க பாப்பம்...

# கரைச்சி பிரதேச வறிய குடும்பங்களுக்கு சுயதொழில் நன்கொடை வழங்க ஏற்பாடு

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலர் பிரிவிலுள்ள 13 வறிய குடும்பங்களுக்கு வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினால் சுய தொழில் நிதி நன்கொடை வழங்குவதற்காக நிதி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலர் கோபாலபிள்ளை நாகேஸ்வரன் உரிய பயனாளிகளுக்கு இந்நிதி நன்கொடையை சமூக சேவைகள் பிரிவினூடாக வழங்கி வைக்க நடவடிக்கை எடுத்துள்ளார், பயனாளிகளுக்கு முதல கட்டமாக தலா 7500 ரூபா வீதம் வழங்குவதற்கென 97,500 ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளது.

ஆடு வளர்ப்பு, மாடு வளர்ப்பு, சிறு வியாபாரம்,சிறு கைத்தொழில் ஆகிய தொழில் முயற்சிகளுக்கே இந்த நிதி அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் பயனாளிகளது சுயதொழில் முன்னேற்றத்தினை அளவிட்டு இரண்டாம் கட்ட நிதியாகிய தலா 7500 ரூபா வீதம் பெற்றுக் கொடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வறிய நிலையிலுள்ள பெண்களை குடும்பத் தலைவர்களாகக் கொண்ட குடும்பங்கள், மற்றுத் திறனாளிகளின் குடும்பங்களே இவ் விதமாக தெரிவு செய்யப்பட்டுள்ளவையாகும்.

சமூக சேவைகள் அலுவலர் இந்த சுயதொழில நிதி நன்கொடையை வழங்க பயனாளிகளின் தொழில் விருத்தியை மேற்பார்வை செய்து பிரதேச செயலருக்கு அறிக்கை சமர்ப்பிப்பார் எனவும் தெரிவிக்க்ப்பட்டுள்ளது. (எஸ்.பி)

## மீன்சந்தை உட்கட்டுமான வேலைகள் ஆரம்பம்

(சங்கானை)

சங்கானை மீன்சந்தை உட்கட்டுமான வேலைகள் முன்னெடுக்கும் நடவடிக்கையினை பிரதேச சபை நிர்வாகம் மேற்கொண்டுவருகின்றது.

உரிய காலத்தில் நிதி வழங்கப்படாத நிலையில் உட்கட்டுமானம் இடம்பெறுவதனை தவிசாளர் உறுதிப்படுத்தவேண்டுமென வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரன் வலி. மேற்கு பிரதேச சபையை கேட்டுள்ளதுடன் நகர எழுச்சி திட்டத்தின் (புறநெகும) கீழ் சங்கானை மீன் சந்தை உட்கட்டுமானம் தொடர்பான கேள்விகோரப் படவுள்ளதாகவும் முதலமைச்சர் தெரிவித்துள்ளார். (92)

# பன்நாட்டு படை அதிகாரிகள் கிளிநொச்சிக்கு விஜயம்




(கிளிநொச்சி)

கொழும்பில் நடைபெற்ற பாதுகாப்பு மாநாட்டில் கலந்து கொண்ட வெளிநாட்டு இராணுவ உயரதிகாரிகள் நேற்று முன்தினம் கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்டனர்.

மாலை 4.00 மணியளவில் கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்ட இவர்கள் இராணுவ முகாம்களுக்கும் விஜயம் மேற்கொண்டதுடன், கிளிநொச்சி நகரில் அமைந்துள்ள ஒத்துழைப்பு மத்திய நிலையத்தையும் பார்வையிட்டனர்.

மேலும் கிளிநொச்சி மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்கவையும் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (29)

# தெல்லிப்பளை வைத்தியசாலைக்கு சலவை இயந்திரம் அன்பளிப்பு



(தெல்லிப்பளை)

தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையின் தாதியர் பிரிவுக்கு தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் உறுப்பினர் சோ.சுகிர்தன் புடவைகள் சலவை செய்யும் இயந்திரம் ஒன்றைத் தனது சொந்த நிதியிலிருந்து அன்பளிப்புச் செய்துள்ளார்.

பிற மாவட்டங்களில் இருந்து வந்து எமது பிரதேசத்துக்குச் சேவையாற்றுகின்ற தாதியர்கள் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையின் நோயாளர் நலன்புரிச் சங்கத்தினரிடம் தமது விடுதிக்கு உடு புடைவைகளைச் சலவைசெய்யும் இயந்திரம் ஒன்று தேவையென கோரிக்கை விடுத்திருந்தனர். அதனைத் தொடர்ந்து நலன்புரிச் சங்கத்தின் நிர்வாக சபை உறுப்பினர் சுகிர்தன் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் இம் மாததததுக்கான கூட்டத்தில் வைத்து இந்த இயந்திரத்தை கையளித்தார்.

இந்த நிகழ்வுக்கு நோயாளர் நலன்புரி சங்கத்தின் தலைவரும் வைத்திய அத்தியட்சகருமாகிய டாக்டர் மு.உமாசங்கர் தலைமை தாங்கினார். நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் செயலாளர் லயன் சி.ஹரிகரன், பொருளாளர் றொபின்சன் மற்றும் நலன்புரிச் சங்கத்தின் உறுப்பினர்கள், வைத தியசாலை தாதியர்கள் எனப் பலர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர். (48)

# பதிவிறக்கப் பெட்டகம்

அரசர் ஒரு போட்டி வைத்தார். யார் சிறந்த பொய் சொல்கிறார்களோ அவர்களுக்கு எனது ராஜ்ஜியத்தையும், மகளையும் தருவேன் என்று. போட்டி நடந்தது. அரசவைக்கு வந்தவர்கள் எல்லாரும் ஏதேதோ பொய்யை அடித்துவிட்டார்கள். ஒருத்தன் நான் வெள்ளைக்காகம் பறந்ததைப் பார்த்தேன் என்றான். அரசர் சிரித்தபடியே அது உண்மையாக இருக்கலாம் என்றார். இன்னொருத்தன் நான் மலையை தலையில் தூக்கினேன் என்று சொன்னான். அநுமார் அதை செய்துவிட்டார். எனவே நீங்கள் செய்ததில் ஆச்சரியம் இல்லை. அது உண்மையாக இருக்கலாம் என்று சொல்லி அனுப்பி வைத்தார். கடைசி வரைக்கும் யாராலும் பொய்யை சொல்ல முடியவில்லை. ஒருநாள் எமகாதகன் ஒருத்தன் வந்தான். இந்த ராஜா நேற்று என்னை அழைத்து இந்த ராஜ்ஜியத்தையும், அவரது பெண்ணையும எனக்கு தருவதாக என்னிடம் ரகசியமாக சொன்னார் என்று அவன் சொல்ல அரசவை திகைத்தது. அரசருக்கு தேள்கொட்டியது போல இருந்தது. அதை பொய் என்று சொன்னால் ராஜா தோற்று விடுவார். உண்மை என்று சொன்னாலும் ஆபத்து. மாட்டிக்கொண்டார்.

*** *** *** ***

பேக்கரிக் கடைக்காரர் ஒருவர் பாண் தயாரிப்பதற்குத் தேவையான வெண்ணெய்யை ஒருவரிடம் தொடர்ந்து வாங்கிக் கொண்டிருந்தார். அரை கிலோ வெண்ணெய்ப் பைக்கெற்றை ஒரு நாள் எடை போட்டுப் பார்த்தார். அது 50 கிராம் குறைவாக இருந்தது. இவ்வளவு நாட்களாக வெண்ணெய் விற்பவர் தன்னை ஏமாற்றியிருக்கிறார் என்பதால் கோபமடைந்த பேக்கரிக்காரர் வழக்குத் தொடர்ந்தார். வெண்ணெய் விற்பவர் நீதிபதியிடம் சொன்னார்:

"ஐயா... என்னிடம் அரை கிலோ எடைக் கற்கள் இல்லை. அதனால் இவரிடம் வாங்கிய அரை கிலோ எடையுள்ள பாணை வைத்துத்தான் வெண்ணெய்ப் பைக்கெற்றை எடை போட்டேன். வேண்டுமானால் பாருங்கள், என் வெண்ணெய்ப் பைக்கெற்றும், இவரது அரை கிலோ பாணும் ஒரே எடையாக இருப்பதை"

எடை போட்டுப் பார்த்ததில் இரண்டும் ஒரே எடைதான் இருந்தது. வழக்குப் போட்டவரே தண்ணடப்பணம் கட்டும்படியானது.

*** *** *** ***

மோட்டார் வண்டி புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட காலம் அது. கார்கள் அப்போதுதான் விற்பனைக்கு வந்து கொண்டிருந்தன. செல்வந்தர் ஒருவர் ஒரு காரை விலைக்கு வாங்கி, அந்தக் காரிலேயே ஊருக்குப் புறப்பட்டார்.

அப்படிச் சென்றவர், திரும்பவும் மோட்டார் வியாபாரியிடம் வந்தார். காரை விற்ற வியாபாரி திகைப்படைந்து, "என்ன பிரச்சினை?" என்று ஆர்வத்துடன் கேட்டார்.

அந்த செல்வந்தர் வியாபாரியிடம், "இந்தக் காரிலே நான் பயணம்செய்யும்போது, வேலி, நடைபாதைகளெல்லாம்என்னை நோக்கியபடி ஓடி வருகின்றன. அடுத்து பாலங்கள் ஓடி வருகின்றன. இந்தக் கோளாறுகளே இல்லாத வேறு ஒரு கார் எனக்குக் கொடுங்கள். இது வேண்டவே வேண்டாம்" என்றாராம்.

*** *** *** ***

மருத்துவஉதவியாளர்–1: "உலகத்திலேயே அதிக வாசனையான பொருள் என்னவென்று தெரியுமா?"

மருத்துவஉதவியாளர்–2: "என்ன மல்லிகைப் பூ, முல்லைப் பூ, ஜவ்வாது, சென்ட் வகையறாக்கள், மற்றும் திருவிளையாடலில் சிவபெருமான் சொல்கிற மாதிரி பெண்களின் கூந்தல்"

மருத்துவஉதவியாளர்–1: "அதெல்லாம் ஓரளவிற்குச் சரிதான்... ஆனால்... உயிர்–தான் உலகத்திலேயே மிகுந்த வாசனையான பொருள். அது இல்லையென்றால் உடம்பு நாத்த மெடுக்க ஆரம்பித்துவிடும் அல்லவா"

*** *** *** ***

அவன் எப்போதுமே எல்லாவற்றிலும் கவனக்குறைவாக இருப்பதாய் அவன் மனைவி
குறைப்பட்டுக் கொண்டாள். அதிலிருந்து கொஞ்சம் கவனமாக இருக்க அவன் முடிவு
செய்தான். ஒரு நாள் பஸ்ஸில் வரும்போது கண்டக்டரிடம் இரண்டு ரிக்கெற்கள் எடுத்தான்.

அருகிலிருந்த அவனுக்குத் தெரிந்த ஒருவர் 'ஏன் 2 ரிக்கெற் எடுக்கிறீங்கள்...?' என்றார்.

"ஒன்று தொலைந்தாலும் ஒன்று இருக்குமல்லவா..."

"இரண்டுமே தொலைந்துவிட்டால்...?"

"அதுக்குத்தான் பணம் வைத்திருக்கிறேனே..."

"பணத்தை யாரும் எடுத்து டார்களென்றால்..?"

"காற்சட்டைப் பொக்கெற்றில் பேர்ஸ் வைச்சிருக்கிறேன்...அதிலிருந்து எடுப்பேன்.."

"அதையும் யாரும் பிக்பொக்கெற் அடிச்சிட்டாங்கள் என்றால்...?

"நான் என்ன முட்டாளா....? அதுக்காகத்தான் பஸ் பாஸ் எடுத்து வைத்திருக்கிறேன்..." என்றான் அவன் பெருமையாக.

# நாவற்குழி "மகிந்தபுரம்" பகுதி அபிவிருத்தி செய்து தரப்படும்

## யாழ். அரச அதிபர் தெரிவிப்பு



பல வருட கால யுத்தத்தி னால் பாதிக்கப்பட்ட பகுதியாக யாழ்ப்பாணம் காணப்படுகின் றது. இதனால் மக்களின் வாழ் விடங்கள் தொடக்கம் அடிப் படை வாழ்வாதார உதவிகள் வரை யிலான பல்வேறு தேவைகள் இப்பகுதி மக்களுக்கு தேவைப் படுகிறது. இவை அனைத்து மக்களுக்கும் பாரபட்சமற்ற வகை யில் கொடுக்கப்படவேண்டும். என யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரி வித்துள்ளார்.

நாவற்குழி மகிந்தபுரம் குடி யிருப்பு பகுதியில் அடிப்படை வசதிகள் இன்றி வாழும் மக் களுக்கு நிரந்தரக் காணி உரி மப்பத்திரங்கள் மற்றும் வீடுகள் புனரமைத்து கொடுத்து மக் களை வாழ்வாதாரத்தில் மேம் பாடடைய செய்வதற்காக நடை பெற்ற மக்களுடனான சந்திப் பின்போது உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித் துள்ளார். அரச அதிபர் அங்கு மேலும் உரையாற்றுகையில் -

பாதிக்கப்பட்ட மக்கள் அனை வரும் ஒரே பகுதியில் வாழ்வ தாக இருந்தால் அவர்களது பிரச்சினைகள் தீர்க்கப்படுவது இலகுவாக இருக்கும். ஆனால் யாழ். மாவட்டம் பரந்துபட்ட பல்வேறு பகுதிகளைக்கொண்டி ருப்பதால் மக்களது வாழ்வாதா ரங்களையும் தேவைகளையும் நிறைவு செய்து கொடுப்பது மிகவும் சவாலானவிடயமாக உள்ளது. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இத்தகைய தேவை களுக்கு குடாநாட்டிலுள்ள அரச உத்தியோகத்தர்களுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கி வருவதால தான் எத்தகைய கடினமான விட யங்களாக இருந்தாலும் அதை இலகுவாக செய்து முடிக்க கூடியதாக உள்ளது.

இப்பகுதிக்கு அனைத்துவித மான உதவிகளும் தேவைப்படு கின்றது. இவர்களது தேவை களை முன்னுரிமை அடிப்படை யில் மின்சாரம் வீதிகள் போன் றன செப்பனிடும் நடவடிக்கை கள் தற்பொது மேற்கோள்ளப் பட்டுவருகின்றன.

குடாநாட்டில் இதுவரை 25000 வீடுகள் மக்களுக்காக வழங்கப்பட்டுள்ளன. மேலும் இனங்காணப்பட்டுள்ள பலருக்கு வீடுகள் வழங்குவதற்கான நட வடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுவருகின்றன.. படிப்படியாகத தான் இவற்றை மேற்கொண்டு நிறைவு செய்து கொடுக்க முடி யும். வாழ்வாதார திட்டங்கள் கொடுக்கப்படுவதில் முன்னு ரிமை அடிப்படையில்தான் திட் டங்கள் பகிர்ந்தளிக்கப்படும். இதில் மிக வறிய மக்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

இப்பகுதியில் நிரந்தரமாக வாழ்பவர்களது தரவுகள் திரட் டப்பட்ட பின்னர் வீடுகளுக்கான உரிமப்பத்திரங்கள் வழங்க ஏற் பாடு செய்து தரப்படும். நிச்ச யமாக இப்பகுதியை மிகக்குறு கிய காலத்தில் மிகச்செளிப் பான பிரதேசமாக மாற்றிய மைத்து தரப்படும் - என்றார்.

இந்த நிகழ்வில் அமைச்ச ரின் யாழ். மாவட்ட ஒருங்கி ணைப்பாளர் கே.வி.குகேந்திரன் (வி.கே.ஜெகன்) நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென் ரின் (உதயன்) சாவகச்சேரி பிர தேச செயலர், தென்மராட்சி அமைப் பாளர் சாள்ஸ் ஆகியோருடன் ஈ.பி.டி.பி.யின் முக்கிய உறுப்பி னர்கள் பலருடன் அப்பகுதி மக்களும் கலந்துகொண்டனர்.

## நெல்சிப் திட்டத்தின் கீழ் வீதி புனரமைப்பு



அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பணிப்புரைக்கமைய நெல் சிப் திட்டத்தின்கீழ் உரும்பிராய் வாகையடி வீதி புனரமைப்பு வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற நிலையில் அதில் ஏற்பட்டிருக்கின்ற இடையூறுகள் தொடர்பாகவும் வீதியின் புன ரமைப்பு வேலைத்திட்டம் தொடர்பாக நேற்று வலி.கிழக்கு பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவரும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி யின் வலி.கிழக்கு பிரதேச இணைப்பாளருமான .இராமநாதன் ஐங்கரன், வலி.கிழக்கு பிரதேச சபையின் தமிழ்த்தேசியக் கூட்ட மைப்பின் உறுப்பினர்,.கந்தையா துரைராஜா, உபதவிசாளர்.கந் தையா தர்மலிங்கம் ஆகியோர் சென்று பார்வையிட்டதுடன், அச்சு வேலி பயிற்றோலை வீதி, கோப்பாய் வடக்கு இலகடிவீதி, உரும் பிராய், ஊரெழு மயான வீதி, அச்செழு வேவிபுரம் போயிட்டி குறுக்கு வீதிகளையும் சென்று பார்வையிட்டிருந்தார்கள். இவ்வீதிகளும் நெல்சிப் திட்டத்தின் கீழ் புனரமைப்பது குறிப்பிடத்தக்கது. (08)

## மின்சாரசபை பணியாளரின் சடலம் யாழ்.போதனாவில் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

இளவாலைப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு மின்சாரம் தாக்கி உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படும் இலங்கை மின்சார சபை ஒப்பந்த அடிப்படையிலான பணியாளரின் சடலம் நேற்றுப் பிற்பகல் யாழ்போதனா வைத்தியசாலையில் சட்டவைத்திய அதிகாரியின் பரி சோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மட்டுவில் வளர்மதி சனசமூக நிலையத்தடியைச் சேர்ந்த வைத்தி லிங்கம் கசிநாத் (வயது 23) என்பவரது சடலமே இவ்வாறு ஒப் படைக்கப்பட்டிருந்தது.

இவரது மரணம் குறித்து மின்சார சபையினரால் இடிமின்னல் தாக்கம் காரணமாவே அவர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படும் அதேவேளை அவர் மின்சாரம் தாக்கியே உயிரிழந்திருப்பதாக இறந்தவரது உறவினர்கள் தெரிவிக்கின்றனர். எனவே இவரது மரணம் குறித்து சட்டவைத்திய அதிகாரியின் பரிசோதனையின் பொருட்டே சடலம் தெல்லிப்பள்ளை வைத்தியசாலையில் இருந்து யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டு ஒப்படைக் கப்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பா)

### காணாமற்...

குழுத் தலைவர் குறிப்பிட்டார். ஆணைக் குழுவுக்கு இதுவரை சுமார் 20 ஆயிரம் முறைப்பாடுகள் கிடைத்துள்ளதோடு அடுத்த சாட்சி விசாரணை எங்கு நடத்துவது என அடுத்த வாரம் தீர்மானிக் கப்பட இருக்கிறது.

இதேவேளை காணாமல் போனோர் தொடர்பான ஜனாதிபதி ஆணைக் குழுவுக்கு ஆலோசனை வழங்குவதற்கு ஜனாதிபதியி னால் நியமிக்கப்பட்ட சர்வதேச பிரதிநிதிகள் குழுவில் இருவர் இலங்கை வந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

குழுவின் தலைவரும் இந்திய நாட்டு நிபுணர் குழு உறுப்பினரும் இவ்வாறு இங்கு வந்துள்ளதோடு அவர்களை விரைவில் சந்திக்க இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

### ஒவ்வொரு..

பலிதஹவாட். சுகாதார அமைச்சின் அறிக்கையின்படி இந்த ஆண்டில் மட்டும் 58 பேர் டெங்கு நோயால் உயிரிழந்துள்ளதாகத் தெரிவித்த அவர் நுளம்புகள் இனப்பெருக்கம் செய்து பரவும் இடங்களை இனங்கண்டு பெருகும் நுளம்புகளை அழிப்பதற்கான திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்று கூறினார். மழைக் காலம் தொடங்கி விட்டதால் டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதற் காக வரும் 29, 30 ஆம் திகதிகளில் விசேட திட்டங்களை நாடு முழுவதும் மேற்கொள்ள ஜனாதிபதி செயலணியின் ஆதரவுடன் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் கூறினார். மேலும் மேல் மாகாணத்திலேயே 60 வீதமான டெங்கு நோயாளர்கள் இனங் காணப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்த அவர் கடந்த மே மாதத்துடன் ஒப்பிடுகையில் டெங்கு நோயாளிகளின் எண்ணிக்கை குறைவடைந்து விட்டது என்றும் அவர் குறிப்பிட்டார்.

### அரசியல்...

பிரதமரிடம் எடுத்துரைத்ததோடு, இலங்கை யின் வடக்கு, கிழக்கு பகுதிகளில் நலத்திட்டப் பணிகள் என்ற பெயரில் அந்நிய சக்திகளின் ஊடு ருவல் காரணமாக அச்சம் ஏற்பட்டுள்ளதாக கூறிய தாகவும் தெரிவித்தார்.

மேலும், இந்திய அரசாங்கம் தொடர்ந்து இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் அனைத்து நலப்பணிகளையும் மேற்கொள்ளும் என்றும், தேவையான அனைத்து விவகாரங்களி லும் தவறாமல் அக்கறை காட்டும் என்றும் நரேந் திர மோடி உறுதியளித்ததாகவும் அவர் கூறினார்.

இலங்கைத் தமிழ் மக்களின் நலனுக்காக இந்தியப் பிரதமரை சந்திக்கும் நீங்கள், தமிழகத் தின் அரசியல் தலைவர்களின் தலையீட்டை வேண்டாம் என்று மறுப்பது ஏன் என்று சம்பந் தனிடம் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர்.

அதற்கு பதிலளித்த சம்பந்தன், நாங்கள் யாரை யும் வெறுக்கவில்லை, தமிழகத்தின் அரசியல் தலைவர்கள் மற்றும் மக்களின் பங்களிப்பைமுழு மையாக வரவேற்போம் என்றார்.

ஆனால், இதற்குத் தேவையான செயற்பாடு கள் அனைத்தும் ஒற்றுமையாகவும் ஒருமனதோடும் நடைபெற வேண்டும் என்று விரும்புவதாக அவர் பதிலளித்தார்.

இந்திய மக்களவைத் தேர்தலுக்குப் பின்னர் தமிழகத்தில் கிடைக்கப்பெற்ற வெற்றிக்கு வாழ்த் துக் கூறி தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு கடி தம் எழுதிய போதே, நேரில் சந்திக்க விருப்பம் தெரிவித்ததாகவும், அதன் பின்னர் தற்போது வரை சந்திப்பு தொடர்பான பதிலுக்கு காத்திருப்ப தாகவும் தெரிவித்தார்.

தமிழக அரசுடன் தாங்கள் தொடர்பில் இல்லை என்று கூறுவது தவறு என்றும் அவர் அப்போது விளக்கம் அளித்தார்.

### நிறைவேற்று...

கூட்டங்கள் நடத்தப்பட உள்ளன. நாட்டின் பிரதான நகரங்கள் அனைத்திலும் இந்தக் கூட்டம் நடத்தப்பட உள்ளதாகத் தெரிவிக் கப்படுகிறது. முதல் கூட்டம் கண்டி இந்து கலாசார மண்டபத்தில் நடத்தப்படவுள்ளது.

### கூட்டமைப்பு...

துவதன் மூலம் நன்மைகளை எட்டமுடியாது என்றும் வாசு தேவ நாணயக்கார தெரிவித்தார்.

குறைந்த பட்சம் ஏனைய மாகாணசபைகளில் தற்போது நடைமுறையில் இருக்கின்ற அதி காரங்களையாவது வடக்கு மாகாணசபைக்கு அளிப்பதற் காக அரசாங்க தரப்பை இணங் கச் செய்யும் முயற்சிகளில் தாம் உள்ளிட்ட அரசாங்கத்திலுள்ள இடதுசாரித் தலைவர்கள் ஈடுபட் டுள்ளதாகவும் சமூக நல்லிணக்க அமைச்சர் பிபிசியிடம் கூறினார்.

வடக்கில் பாதுகாப்பு படை களுக்காக காணிகள் கையகப் படுத்தப்படுவதையும் மக்களின் சிவில் வாழ்க்கைக்கு பாதிப்பு ஏற்படும் விதத்தில் இராணுவம் நிலைகொண்டிருப்பதையும் தடுப்பதற்காக தாம் உள்ளிட்ட சில தலைவர்கள் அரசாங்கத்தை இணங்கச் செய்யும் முயற்சி களில் ஈடுபட்டுள்ளதாகவும் அமைச சர் தெரிவித்தார்.

### அரசியல் தீர்வை...

பீடுகளும் எதிர்பார்ப்புகளும் எவ்வாறு உள்ளன என்பது பற்றியும் இரா. சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் குழுவினர் பிரதமருக்கு விளக்கம் அளித்துள்ளனர்.

ஒருங்கிணைந்த இலங்கை சட்டத்திற்குள் தமிழர்களுக்கு சம உரிமை, நீதி, கௌரவம் மற்றும் சுயமரியாதை ஆகியவற்றிற்கு இலங்கை அரசு உத்தரவாதம் அளிக்கவேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார் என்று அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பின் போது, பிரதமர் நரேந்திர மோடியின் முதன் மைச் செயலர், நிருபேந்திர மிஸ்ரா, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவ்ல், வெளியுறவுச் செயலர் சுஜாதா சிங் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கூட்டமைப்பின் சார்பில் சம்பந்தன் தலைமையில் மாவை சேனா திராஜா, சுரேஷ்பிரேமச்சந்திரன் செல்வம் அடைக்காலநாதன், சுமந் திரன், பொன்செல்வராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

### ஆக்கபர்வ...

கக் கொண்டு முன்னகர்வதுதான். இதையே நாங்கள் கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக மாறி மாறி ஆட்சிக்கு வந்த இலங்கை அரசுகளிடமும், தமிழ் மக்களிடமும் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றோம்.

ஆனால் உங்களைச் சந்தித்த கூட்டமைப்பினரோ 13 ஆவது திருத்தத்தை அர்த்தமற்றது என்றும், அதை அமுல்படுத்தி தீர்வொன்றை நோக்கிச் செல்லமுடியாது என்றும் கூறிவருகின்றார் கள். இந்த நிலையில் இன்று (நேற்று) அவர்களுடனான சந்திப்பில் 13ஆவது திருத்தத்தை அடிப்படையாகக் கொண்டு அரசியல் தீர்வை கட்டியெழுப்ப வேண்டும் என்றும் இலங்கையில் உள்ள அனைத்துத் தரப்பினருடனும் கூட்டுறவாகச் செயற்பட்டு பிரச்சி னைக்கு தீர்வுகாண உழைக்க வேண்டும் என்று நீங்கள் கூறியி ருப்பதை மகிழ்ச்சியோடு வரவேற்கின்றேன்.

அதேபோல் இலங்கையில் குறிப்பாக வடக்கு கிழக்கில் இந்திய அரசாம் முன்னெடுக்கப்படும் உதவிகளை தொடருவதாகவும், இவ் விவகாரங்களில் இந்திய அரசு தவறாமல் கரிசனையோடு செயற்படும் என்றும், இலங்கையில் தமிழ் மக்கள் நீதி, பாதகாப்பு, சமத்துவம் பெற்று வாழ வேண்டும் என்றும் நீங்கள் கூறியிருப்பது கண்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன். உங்களது வார்த்தைகள் தமிழ் மக்களுக்கு நிச்சயம் புதிய நம்பிக்கையை ஏற்படுத்தும் என நம்பு கின்றேன். உங்களின் பெறுமதி மிக்க ஆலோசனைகளை கூட்ட மைப்பினர் சிரமேற்று செயற்பட வேண்டும் என்பதை பொறுத் திருந்தே பார்க்கவேண்டியுள்ளது என்றும் அந்தக் கடிதத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

# முன்பள்ளிகளின் ஆசிரியர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த திட்டம்

## முன்வந்தது பனை அபிவிருத்தி சபை





(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கொத்தணிக்கு கீழ் தென்னை பனை அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படுகின்ற முன்பள்ளிகளின் ஆசிரியர்களுடைய வாழ்வாதார மேம்பாட்டுக்கு உதவ பனை அபிவிருத்தி சபை முன்வந்து உள்ளது.

பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பசுபதி சீவரத்தினத்தின் வழிகாட்டலில் கூட்டுறவு முறையிலான பாற்பண்ணைத் திட்டம், கூட்டுறவு முறையிலான பனைக் கைத்தொழில் திட்டம் ஆகியவற்றின் ஊடாக இவர்களின் பொருளாதாரத்தை கட்டி எழுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் சங்கானை, மானிப்பாய், சண்டிலிப்பாய், தெல்லிப்பளை, பண்டத்தரிப்பு, கோண்டாவில், காரைநகர் ஆகிய 07 தென்னை பனை அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களாலும் நடத்தப்படுகின்ற முன்பள்ளிகளின் ஆசிரியர்கள் நேற்றுக் காலை வலிகாமம் கொத்தணி காரியாலயத்துக்கு வரவழைக்கப்பட்டு இத்திட்டங்கள் குறித்து அறிவுறுத்தப்பட்டார்கள்.

இச்சந்திப்பு கொத்தணி முகாமையாளர் சுதாகரன் தலைமையில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு தலைவர் பசுபதி சீவரத்தினம் தெரிவித்ததாவது,

முன்பள்ளி ஆசிரியர்களான உங்களின் அர்ப்பணிப்பு, பற்றுறுதி நிறைந்த சேவைகளை நான் நன்கு அறிவேன். இன்றைய சிறுவர்கள்தான் நாளைய எமது சமூகம். எனவே நாளைய சமூகத்தை உருவாக்குகின்ற சிற்பிகள் நீங்கள்தான்.

அப்பேர்ப்பட்ட பாரிய கடமையை செய்கின்ற உங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துகின்ற தலையாய பொறுப்பு மக்களையும், சமூகத்தையும் நேசிப்பவர்களுக்கு நிச்சயம் உள்ளது. இந்நிலையில் குறைந்த ஊதியத்தில் மாபெரும் கடமையை செய்கின்ற உங்களின வாழ்வாதாரத்தை மேம்படுத்த எமது பனை அபிவிருத்தி சபை முன்வந்து உள்ளது. உங்கள் கூட்டு முயற்சியை கொண்டு நீங்கள் ஒரு பாற்பண்ணையை கூட்டுறவு முறையில் உருவாக்க முடியும். அதே போல பனைக் கைத்தொழிலை கூட்டுறவு அடிப்படையில் மேற்கொள்ள முடியும்.

பனைக் கைத்தொழில் மூலம் எமது சபை மட்டக்களப்பில் 8000 குடும்பங்களைச் சொந்த கால்களில் இன்று நிற்க வைத்து உள்ளது. எமது சபையின் இன்றைய பொருளாதார சாதனைகளுக்கு அடிப்படையாக இருப்பது மக்கள் நலன் சார்ந்த அரசியல் வழிமுறையே ஆகும். இந்நிலையில் எமது வாழ்வாதாரத்தை மேம்படுத்துகின்ற எமது பொருளாதார திட்டங்களுக்கு அனைவரினதும் அர்ப்பணிப்புடனான ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றோம். எனத் தெரிவித்தார்.

பனை அபிவிருத்தி சபையின் மேற்சொன்ன திட்டங்கள் மூலம் 110 ஆசிரியர்கள் வரை பயனடைவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இப்போது தலா 4000 ரூபாய் வரையிலேயே இவர்கள் ஊதியம் பெறுகின்றார்கள என்பது குறிப்பிடத்தக்கது.

# ஜே.வி.பி. பொன்சேகா போட்டி ரணிலுக்கே சாதகமாக அமையும்

## என்கிறது ஐ.தே.க.

(கொழும்பு)

ஜே.வி.பி மற்றும் ஜனநாயகக் கட்சி என்பன எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் ரணில் விக்ரமசிங்கவுக்கு சாதகமாக அமையும் என கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பியும், சரத் பொன்சேகாவின் ஜனநாயகக் கட்சியும் சிங்கள மற்றும் பௌத்த வாக்கு வங்கிகளின் அடிப்படையில் இயங்கும் கட்சிகள்.

இதனால், அரசாங்கத்தின் மீது அதிருப்தி கொண்டுள்ள சிங்கள மற்றும் பௌத்த வாக்குகளை இந்த இரண்டு கட்சிகளும் தமக்குள் பிரித்துக் கொள்ளும்.

எனினும் ஐக்கிய தேசியக் கட்சியின் வாக்கு வங்கிக்கு இதனால் எந்த சேதமும் ஏற்படாது. கடந்த தென் மற்றும் மேல் மாகாண சபைத் தேர்தல்களில் இது தெளி வாக புலப்பட்டது.

அதேவேளை சஜித் பிரேமதாசவை ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவராக நியமிப்பதன் மூலம் கட்சியினருக்கு புத்துயிர் கிடைக்கும்.

இந்த நிலைமையில், வாக்குச் சாவடிகளுக்கு செல்லாதிருந்த ஐக்கிய தேசியக் கட்சியினரின் வாக்குகள் ரணில் விக்ரமசிங்கவுக்கு கிடைக்கும்.

சஜித் பிரேமதாசவை பிரதித் தலைவராக நியமிப்பதன் ஊடாக 10 வீதத்திற்கும் மேற்பட்ட வாக்குகள் கட்சிக்கு புதிதாக கிடைக்கும் எனவும் அந்த நாடாளுமன்ற உறுப்பினர் கூறியுள்ளார்.

எதிர்க்கட்சிகள் இணைந்து பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தினால், அது ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு சாதகமாக அமையும் எனவும், எதிர்க்கட்சிகள் தனித்தனியே மூன்று வேட்பாளர்களை நிறுத்தினால், அது ஜனாதிபதிக்கு பாதிப்பாக அமையும் எனவும் அமைச்சர் பசில் ராஜபக்ச அண்மையில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஊவா மாகாண வறுமைக்கு கஞ்சா ஒழிப்பே காரணம்

## அமைச்சர் சுமேதா ஜயசேனா தெரிவிப்பு

ஊவா மாகாணத்தில் நிலவும் வறுமைக்கு கஞ்சா விற்பனையை தடுக்க அரசாங்கம் எடுத்த நடவடிக்கையும் ஒரு காரணமாக இருக்கலாம் என அமைச்சர் சுமேதா ஜீ ஜயசேன தெரிவித்துள்ளார்.

மொனராகலையில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

ஊவா மாகாணத்தில் வறுமை அதிகரித்துள்ளதாக நான் கூறமாட்டேன். ஓரளவு அதிகரித்திருக்கலாம். ஒரு காலத்தில் இந்த பிரதேசத்தில் கஞ்சா போன்ற பல வியாபாரங்கள் நடைபெற்றன.

போதைப்பொருளைக் கொண்டு வருவதாக அரசாங்கத்தின் மீது அடிக்கடி குற்றம் சுமத்தப்பட்டு வருகிறது.

போதைப்பொருள் விற்பனையாளர்கள் இருக்கின்றனர். அவர்களுக்கு உதவி வருவதாக அரசாங்கத்தின் மீது குற்றம் சுமத்தப்படுகிறது. எனினும் நான் அதனை மறுக்கின்றேன். போதைப்பொருளைக் கடத்தி வருபவர்களை அரசாங்கம் பகிரங்கமாக கைது செய்து நடவடிக்கை எடுத்து வருகிறது.

மொனராகலையில் அதிகளவு வருமானம் பெறும் தொழிலாக கஞ்சா இருந்து வந்தது. கஞ்சா போன்ற போதைப்பொருட்களை தடுக்க அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்ததால், வருவாய் குறைந்து போயிருக்கலாம் என நம்புகிறேன் எனவும் அமைச்சர் சுமேதா ஜீ. ஜயசேன கூறியுள்ளார்.

அதேவேளை பாலியல் தொழிலுடன் அமைச்சர் சுமேதா சம்பந்தப்பட்டுள்ளதாக வெளியாகியுள்ள செய்திகளுக்கு பதிலளித்துள்ள அமைச்சர்,

விபச்சார விடுதிகளின் பின்னணி யில் அமைச்சர் சுமேதா என செய்திகள் பத்திரிகைகளில் வெளியாகியுள்ளன. நான் எப்போதும் அப்படியான நடவடிக்கைகளில் சம்பந்தப்படவில்லை. நான் பெண்கள் விவகார அமைச்சராக 10 வருடங்கள் பணியாற்றியிருக்கின்றேன்.

இப்படியான நடவடிக்கைகளை நான் எதிர்ப்பவள். எவர் செய்தாலும் அதனை அனுமதிக்க மாட்டேன். அதனை கண்டிக்கின்றேன. எனக்கு அவதூறு ஏற்படுத்த பலர் முயற்சித்து வருகின்றனர் என குறிப்பிட்டுள்ளார்.

# போலி மருத்துவர்களுக்கு வேண்டும் தண்டனை

## அரச மருத்துவ சங்கம் கோரிக்கை

(கொழும்பு)

மோசடியான போலி மருத்துவர்களுக்காக ஐந்து வருட சிறைத்தண்டனை வழங்கப்பட வேண்டும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரியுள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய அந்தச் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் நவீன் த சொய்சா இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

நான்காயிரம் போலியான மருத்துவர்கள் நாடளாவிய ரீதியாக உள்ளனர். அவர்களுக்கு ஐந்து வருட சிறைத் தண்டனை வழங்குவதற்கான முறைமை ஒன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.

தனியார் பிரிவு வி‘ேட மருத்துவ நிபுணர்கள் தொடர்பில் ஆராய வேண்டும்.

இதுத்விர, அரச மற்றும் தனியார் பிரிவு விஷேட மருத்துவர்கள் தொடர்பான விபரங்கள் சுகாதார அமைச்சின் இணையத் தளத்தில் வெளியிடப்பட வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# கைபேசியில் தங்கம் கடத்த முயன்றவர் கைது

இரண்டு கையடக்கத் தொலைபேசிகளில் மறைத்து தங்க கட்டிகளை கடத்துவதற்கு முற்பட்ட சந்தேகநபர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த நபர் தங்கத்தை சென்னைக்கு கொண்டுசெல்ல முற்பட்டுள்ளதாக சுங்க ஊடகப்பேச்சாளர் லெஸ்லி காமினி தெரிவித்தார்

சுமார் 11 இலட்சத்து 55 ஆயிரம் ரூபா பெறுமதியான 231 கிராம் நிறையுடைய தங்க கட்டிகளை சுங்கப் பிரிவினர் இதன்போது பறிமுதல் செய்துள்ளனர். கந்தானை பகுதியைச சேர்ந்த 35 வயதான ஒருவரே சுங்கப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தங்க கட்டிகள் அரசுடைமையாக்கப்பட்டதுடன், 50 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்ட பின்னர் குறித்த நபர் விடுவிக்கப்பட்டுள்ளார்.




## விமானத்தில் வேலை செய்ய விருப்பமா?



**இது ஒரு அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள் விமான நிலையம் (தனியார்) பகுதிக்கு சுத்திகரிப்பாளர் பாதுகாப்பாளர் பெக்கிங் 18-55 வயதான ஆண்,பெண் தேவை சம்பளம் 18,000-35,000 வரை தங்குமிடம் உணவு, பயிற்சி வழங்கப்படும் (சிங்களம் அவசியமில்லை) வேலை தேடி அங்கும் இங்கும் அலையாமல் இன்றே அழையுங்கள் 0766398366.**

(C/3746)



## வருகின்ற வருமானம் போதாதா?

**20,000/= - 38,000/= க்கும் மேற்பட்ட சம்பளத்துக்கு நிரந்தரமான தொழிற்சாலைகளான ஜேம், பிஸ்கட், சொக்லேட், ஐஸ்கிறீம், கிளவுஸ், சிமெந்து, சீட், டயர் ஆகிய நூர் உற்பத்திக்கு பொருட்கள் பெக்கிங பழுதுபார்த்தல், ஸ்டோர்ஸ் ஆகிய பிரிவுக்கு 18 - 55 வயதான ஆண், பெண் தேவை. சாப்பாடு, பாதுகாபபான தங்குமிட வசதி உண்டு. சிங்களம் கட்டாயம் இல்லை. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா முன்னுரிமை. தம்பதிகள், நண்பர்கள் ஒரே இடத்தில் குழுக்களாக வருகின்ற தினமே சேர்த்துக்கொள்ளப்படுவர். (விசேட மாக A/L பரீட்சை எழுதியவர்கள் இணைந்துகொள்ளலாம். (0775964299)** (C/3775)


இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 ஆகஸ்ட் 24 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.